

CPL
6301

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலிகாமம் தெற்கு பிரதேச சபை
**பொதுசன நூல்நிலையம்**
சுன்னாகம்/ உடுவில் / ஏழாலை

## முக்கிய அறிவித்தல்

நீங்கள் எடுத்துச் செல்லும் புத்தகத்தில் கீறுதல், வெட்டுதல், கிழித்தல், அழித்தல், அழுக்குப் படியவிடல் மற்றும் ஊறுபாடு களைச் செய்யவேண்டாமென மிகத் தாழ்மையாகக் கேட்டுக் கொள்கின்றோம். புத்தகங்களை நீங்கள் எடுக்கும்போது இப்படியான குறைபாடுகளைக் கண்டால் நூலகப் பொறுப்பாளருக்கு உடன் தெரிவிக்கவும். அல்லாவிடில் நீங்கள் எடுத்துச்சென்ற புத்தகம் நல்ல நிலையில் இருந்ததெனக் கருதப்படுவதுடன் ஊறுபாடு களுக்கு நூலகப் பொறுப்பாளரினால் விதிக்கப்படும் தண்டத்தை நீங்கள் ஏற்கவேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேடி வந்த தீரன்

# யோசவ் வாஸ் நாடகம்

## யாழ்ப்பாணப் படலம்

CPL
6301

முனிவரின் சீவிய சரிதையை
ஆராய்ந்து வரைந்தது.

ம. பாவிலுப்பிள்ளை
மா. ம. தி.

6301
6301

பதிப்பு: வஸ்தியன் அச்சகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Imprimatur

**V. Rev. Fr; Martin Gunaretne**

O. M. I.

Vic Gen, Colombo

31-7-80.


பதிப்புரிமை:

ம. பாவிலுப்பிள்ளை

மா. ம. தி.


விலை; ரூபா 10-00


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆசாரத்துக்குரிய

யோசவ் வாஸ் முனிவர்.

1687 வைகாசி முதல்

1689 மார்கழி வரை

யாழ்ப்பாணக் குடா நாட்டிலே
நற் செய்தி நவின்றூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6301

# போசவ் வாஸ்

# நாடகம்

## யாழ்ப்பாணப் படலம்

யாத்தவர்:

ம. பாவிலுப்பிள்ளை

மா. ம. தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


அங்கம் I, யாழ்ப்பாணம் வருகை,

காட்சி 1 — 5. 2

அங்கம் II, வியாதியால் வருந்தல்,

காட்சி 1 — 7. 6

அங்கம் III, கத்தோலிக்கரைக் கண்டுபிடித்தல்

காட்சி 1 — 6. 12

அங்கம் IV, சில்லாலையில்

காட்சி 1 — 14. 19

அங்கம் V, 1689 நத்தார் வேட்டை

காட்சி 1 — 20 36

அங்கம் VI பிரிவு,

காட்சி 1 — 4. 52



ACC. NO 6301

C. NO 894.8112



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# யாழ்ப்பாணக் குடாநாடு

யோசவ்வாஸ் முனிவரின்

ஊளிய தளம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

தேடி அவர் நம்மிடையே வந்தார். ஓடி அவரை நன்றியுடன் ஏற்றது நம்முன்னோர் பெருமை. காலங்கடந்தும் அவருடைய ஞாபகம் மங்கியதே யொழிய அழியவில்லை. அவர் அறிவித்த நற்செய்தி மீண்டும் புடமிடப்படு மிக்க காலத்தில் நம்மிடை நடந்ததை நினைவு படுத்துவது அதன் அருமையை அறியவும் ஞான உரிமையைக் காக்கவும் உதவுவதாகும்.

வந்தனைக்குரிய யோசவ் வாஸ் முனிவர் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தது 1687 வைகாசி மாத முடிவிலென்று நமக்கெட்டிய சரித்திரக் குறிப்புகளினின்று துணிந்து கூறலாம். அதன்பின் பட்டணத்திலே வியாதியாயிருந்து சுகம் பெற்றார். சுத்தோலிக்கரைத் தேடிக் கண்டுபிடிக்க ஆனி முடிவிலாகும். எனவே, சில்லாலைக்குச் சென்றது ஆவணிக்கு முன் என்று சொல்லலாம். ஆகவே, நத்தார் காலத்தில் முதற் பூசைவைத்த கதை யாழ்ப்பாணப் படலத்துக்குப் பொருந்தாது. அச்சம்பவம் 1689ல் கொழும்பிலே பிரகான்சா சுவாமிக்குப் பொருந்தும்.

1689 நத்தார் மூட்டம் கலாபனை நடந்ததற்கு அத்தாட்சிகள் பல உள. அதன் பின்னர் யாழ்ப்பாணத்திலே ஊழியம் செய்ய முடியாததால் முனிவர் பூநரியூடாக வன்னி கடந்து புத்தளம் போனார் என்பது கடிதங்களாலறிந்தது. ஒல்லாந்தர் சைனியம் பின் தொடர "முன்வற்றிப் பின் பெருகு" என்று சொல்லிப் புன்னாலைப் பாதையாலே போனாரென்று ஐதிகமுண்டு.

இரண்டரை ஆண்டளவில் எம்மவரிடையே வாழ்ந்து நமது மண்ணைப் புண்ணிய பூமியாக்கிய புனித புருடரின் நினைவை நாம் பொன்னெனப் போற்றுவது கடமை. நம்மவரிடையே போற்றிக் காக்கப்படும் கர்ணபரம்பரைக் கதைகள் பல கால இட வரையறை கடந்து கலப்புண்டு முரண்பாடுடையனவாகத் தோன்றுகின்றன. அந்தச் சிக்கலை இயன்றளவு நீக்கி முனிவர் சரிதை சிறுவர் மனதிலும் பதியும்படி சிறு காட்சிகளாகச் சித்திரித்திருக்கிறேன்.

காட்சிகளுக்கு ஆயத்தஞ் செய்யுமிடைவேளையில் இசைப் பாடல்கள் வசன விளக்கங்கள் மூலம் கதையின் தொடர்பும் வாழ்க்கையின் பொருளும் தெளிவாதல் விரும்பத்தக்கது.

நன்றிக்கடன் தீர்க்க நான் புனைந்த நாடகத்தை
ஒன்றுக்குதவா தென்றுதைத்து நீருமிழாமல்
அன்புக் கரம் நீட்டி ஆதரித் துமது சிறார்
இன்புற் றுவந்து கற்க இதமாய் நடித்திடுவீர்.

மா. பாவிலுப்பிள்ளை மாமதி.
மக்கோனு
15-8-1976.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்ப்பணம்

சிறுவர்கள் என்னிடம்
வரவிடுங்கள் இறையரசு
பெறுவர் அவர் போன்றோரே
என்றார் எம்மீட்பர்.
கறையிலா நெஞ்சினீர்
கடவுளையே காண்மின்
குறையிலா வாழ்வு பெற
இறைஞ்சுகிறேன் இந்நூல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகம்
6301

# யோசவ் வாஸ் நாடகம்

## யாழ்ப்பாணப் படலம்:

### காப்பு

சில்லாலை ஊருயரு நல்லால யத்து நமர்
எல்லாரு முய்ய மருந் தியுந்தாய் — பொல்லாத
பேயகல ஆன்ம உடல் நோயகல உன்னுதர
நாயகனை நான டையத் தா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கம் I

## யாழ்ப்பாணம் வருகை

### காட்சி 1

(யாழ்ப்பாணம் அலுப்பாந்தி, சுங்க அதிகாரி கந்தோர், மத்தியான நேரம்).

கூலியாள் - ஐயா, தூரத்திலே ஒரு தோணி வருகிற மாதிரித் தெரிகிறது.

சேவகன் - (கடலைக் கவனித்துப் பார்த்துவிட்டு) ஆமாம், அது தோணிதான். இன்று சரியான வேலைதான் வரப்போகிறது. எப்படியும் உடனே அதிகாரிக்கு அறிவிப்போம். (உள்ளே போய்) ஐயா, கடலிலே ஒரு உரு எட்ட வந்து கொண்டிருக்கிறது.

அதிகாரி - உருவா? உண்மையாகவா? எங்கிருந்து வரக் கூடும்! புயலின் காரணமாகத் தூத்துக்குடித் தோணி வரவில்லைத்தான். எப்படியாயினும் வேலைக்குத் தயாராக வேண்டியதுதான். உடனே போய்க் குமஸ்தாக்களையும் கூலிக் காரரையும் வரச் சொல்லு.

### காட்சி 2

(ஏலோ லோம், ஏலேலோம் கப்பற் பாட்டுக் கேட்கிறது; சிறிது நேரத்தால் தோணி கரை சேர்ந்து பிரயாணிகளிறங்கிப் பொட்டலங்களுடன் சோதினைக்காக வரியில் நிற்கிறார்கள். கூலிக்காரர் உடையில் யோசவ் வாசும் யோஹனும் உடல் நலங் கெட்ட நிலையில் நிற்கிறார்கள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரி - ஏ, கிழவன் நீ எங்கிருந்து வருகிறாய்?

வாஸ் - மன்னாரிலிருந்து வருகிறோமையா? இங்கு ஏதாவது வேலை செய்து பிழைக்கலா மென்று வந்தோம்.

அதிகாரி - இந்தக் கோணிப் பையில் என்ன சாமானிருக்கு?

யோண் - எங்கள் உடுமானங்களும் சில சாதாரண தேவைப் பொருட்களுமையா.

அதிகாரி - (உதவியாளுக்கு) இவைகளைச் சோதிக்க வேணுமென்று நினைக்கிறீரா?

உதவியாள்- இந்தப் பரதேசிகளிடம் என்ன இருக்கப் போகிறது. மன்னாரிலிருந்து என்ன சரக்கு வரப் போகிறது. அதைத் தட்டிவிடுவோம்.

அதிகாரி - சரி, போகலாம்.

இருவரும்- மெத்தப் பெரிய உபகாரமையா!
(இருவரும் வெளியாலே போகிறார்கள்).

வாஸ் - (தனக்குள்ளே) பரலோக பிதாவே! உமக்கு எனது நெஞ்சு நிறைந்த நன்றி. நீரே எல்லாவற்றையும் ஆண்டு நடத்துகிறீர் என்று காண்கிறேன். தூத்துக்குடியிலிருந்து நேரே வந்திருந்தால் இங்கு கட்டாயம் சோதித் திருப்பார்கள்; அகப்பட்டிருப்போம், அதனாற் தவறத்தானோ மன்னார் மட்டுமலைந்து இங்கு வந்து சேரத் திருவுளமானீர்.

## காட்சி 3

(யோசவ் வாசும் யோணும் ஒரு மரத்தின் கீழ் முடிச்சுகளை வைத்து விட்டு இளைப் பாறுகிறார்கள்)

யோண் - பிதாவே, இவ்வளவு கஷ்டநஷ்டமெல்லாம் பட்டு, எத்தனையோ காதவழி கால் கடுக்க நடந்து, கடலும் தரையும் தாண்டி, உமது இலட்சிய பூமியில் இதோ வந்து சேர்ந்து விட்டோம், இனி எங்கு போவது, என்ன செய்வது என்பது தான் வினா?

வாஸ் - ஆமாம் மகனே, பரலோகபிதா தமது அளவற்ற ஞானம் வல்லபத்தின் படியே எல்லாவற்றையும் நடத்துகிறார்: அவரே எம்மை இன்னும் வழி நடத்துவார். இப்போது பொழுது சாய்கிறது; எழும்பு, ஊருக்குள்ளே போய் ஏதாவது உணவு யாசிப்போம்.

யோண் - வயிறு நல்லாயக் கடிக்கிறதுதான். சரிபோவோம்.
(தெருவழியே நடக்கிறார்கள்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி 4

(ஒரு வாசற் கதவிலே தட்டுகிறார்கள்).

தாய் - பிள்ளை, ஆரோ தட்டிக் கேட்கிறது. உதாரென்று பார் மகளே.

மகள் - (எட்டிப் பார்த்து விட்டுத் திரும்பி வந்து) ஒரு கிழவனும் ஒரு பொடியனுமம்மா. பரதேசிகளாம்; பசிக்குதாம், ஏதும் தரட்டுமாம்.

தாய் - அப்படியா? இப்போது வடித்த கஞ்சி அந்தச் சட்டியிலிருக்கிறதே. அதிலெடுத்துக் கொடேன்.

மகள் - அந்த மனிதனைப் பார்க்கப் பரிதாபமாயிருக்கம்மா. கொஞ்சம் சோறும் கலந்து தேங்காயும் துருவிக் கொடுக்கட்டுமா?

தாய் - உன் விருப்பம் போலச் செய்யேன்.

மகள் - (இரு சிரட்டைகளைக் கொடுத்து) இந்தாருங்களப்பா, குடியுங்கள். (வார்க்க அவர்கள் சப்பிக் குடிக்கிறார்கள்) சிவ சிவா, இவர்களுக்குச் சரியான பசியாயிருக்கிறதே! இன்னும் கொண்டு வருகிறேன். பசியாறு மட்டும் குடியுங்கள்.

(கஞ்சி குடித்து முடிந்ததும்)

வாஸ் - மனமார்ந்த நன்றி மகளே, நல்ல கடவுள் உங்களை ஆசீர்வதிப் பாராக!

யோசவ் - மெத்தப் பெரிய உபகார மம்மா.
(வெளியே தெருவில் போகிறார்கள்)

## காட்சி 5

(இருவரும் தெருவில் நடந்து கொண்டு)

யோசவ் - ஆண்டவர் எவ்வளவு நல்லவர். அதிகம் அலைய விடாமல் எங்களுக்கு நல்ல உணவு அளித்தாரே. குத்தரிசிக் கஞ்சியும் துருவிய தேங்காயும் வரண்டிருந்த வயிற்றுக்குப் பெரு விருந்து போலிருந்ததே!

வாஸ் - ஆம், நல்ல தேவன் தான் இந்த மனிதருக்கு இரக்கமுள்ள இருதயத்தைக் கொடுத்தார். அவருக்கே முதல் நன்றி உரித்தாகுக. இவர்கள் சமயம் சைவம். அந்தச் சிறுமி சொன்னதைக் கவனித்துக் கேட்டாயா? இனி உலாவிவரும் போது இடங்களையும் ஆட்களையும் அவதானித்துச் சாதாரண (Catholic) கிறித்தவர்கள் எங்கே இருக்கிறார்களென்று கண்டு பிடிப்பது தான் எமது பிரதான வேலையாயிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோண் - ஆமாம், வீட்டின் முன் சுவரில் "ஓம் முருகா" என்று எழுதியிருப்பதையும் கவனித்தேன் சுவாமி.

வாஸ் - அப்படியான வெளி அடையாளங்கள் இங்குள்ள கத்தோலிக்கர் வீடுகளிலே காணப்பட மாட்டாது. கல்வீன் பதிதர் சத்திய வேதத்தின் சத்துராதிகள். அதை அடியோடு அழிக்க ஆவன வெல்லாம் செய்கிருர்கள். ஆதலால் வேதக்காரர் அதை வெளியாகக் காட்டப்படாது. எனவே, பேச்சிலும் நடைமுறையிலு மிருந்தே நாமவர்களைக் கண்டு பிடிக்க வேண்டும்.

யோண் - இனி, இரவு தூங்குவதற்கு எங்கு போவோம். இருட்டாகு முன்னம் ஓரிடம் தேடவேண்டுமே!

வாஸ் - ஊரின் அந்தலை மட்டும் நடப்போம். தேவதாயார் ஒரு தகுதியான இடம் காட்டித் தருமாறு அவவுடைய செபமாலையைச் செபித்துக் கொண்டு போவோம்.

(தாழ்ந்த குரலில் செபமாலை சொல்லிக் கொண்டு வீதி வழியே நடக்கிருர்கள்)

யோண் - அதோ அந்தப் படலை யருகில் ஒரு கிழவி நிற்கிரு. எங்காவது தங்கமுடியுமா என்று அவவிடம் விசாரிப்போமா?

வாஸ் - நல்ல யோசனைதான், கேட்டுப் பார்ப்போம். (கிழவிமுன்ஞலே) வணக்கம், அம்மா.

கிழவி - நீங்களார்? என்ன வேணும்?

வாஸ் - நாங்கள் பரதேசிகள் இன்றுதான் இங்கு வந்து சேர்ந்தோம். எங்காவது இன்றிரவு தங்குவதற்கு உதவி செய்ய முடியுமா தாயே?

கிழவி - தங்கிப் போகவா? சிறிது தூரம் போனல் பிள்ளையார் கோயில் வரும். அங்கேயுள்ள தங்குமடத்திலே நல்லாயிடமுண்டு. அதோடு, சில வேளை புற்கை மோதகம் வாழைப் பழந்தானும் கிடைக்கலாம்.

வாஸ் - இங்கு ஒரு வீட்டில் உணவு கொடுத்தார்கள். படுக்க மட்டுந்தான் இடந்தேவை.

கிழவி - அப்படியானல், உங்களைப் பார்க்கக் கள்வர் காடரைப் போலில்லை. இந்த மடுவத் திண்ணையிலேயே படுத்தெழும்பிப் போகலாமே. வழிப்போக்கர் பாவனைக்கென்றுதானே எனது பேரன் முதலியார் இதைக் கட்டுவித்தார். எவராவது வந்து கேட்டால் நானுத்தரவு கொடுத்ததென்று சொன்னற் போதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவரும்- மெத்தப் பெரிய உபகார மம்மா!

கிழவி - வேண்டுமானால் வீட்டில் இரண்டு பழம் பாய்கள் பெற்றுக் கொள்ளலாம். நான் சொன்னதென்று வேலைக்காரனிடம் கேளுங்கள்.

வாஸ் - கடவுளே உங்களை ஆசீர் வதிக்கட்டும்.

# அங்கம் II

## வியாதியால் வருந்தல்

### காட்சி 1

- (யாழ்ப்பாணம், தெருவில் இருவர் சம்பாசனை)

கந்தையா - கேட்டியா குமாரு விசளம். வள்ளிக் கிழவி வீட்டு வாசற் திண்ணையிலே இரண்டு பயணிப் பரதேசிகள் இப்ப ஒரு கிழமையாக விடுதி விடுகிறார்கள்.

குமாரு - ஓம், நானும் கண்டிருக்கிறேன். பகலிலே பிச்சை வாங்கப் போய்விட்டுப் பொழுது சாய வருவார்கள். ஆனால் அவர்கள் அப்பிராணிகள் போலத் தெரியுதே!

கந்தையா - அதல்லப் பிரச்சனை. அந்தக் கிழவனுக்கு ஏதோ வயிற்றுக் கோளாறும். கோதாரிகீதாரிதானோ தெரியாதாம்.

குமாரு - அடடா குடி கெட்ட காரியமே. உடனே அவர்களை ஊருக்கு வெளியே விரட்டி விடவேண்டும்.

கந்தையா - ஆமாம், அப்படித்தான் மயிலுவும் சொன்னான். ஆனால் அந்தக் கிழவி தனது திண்ணையிலே கிடந்து சாகட்டுமென்று பிடிவாதமாய் நிற்கின்றா.

குமாரு - நல்ல பகிடி. மற்வர்களுக்குத் தொற்றின பிறகு கிழவியார் வருவாரா பரிகாரம் பண்ண? உடனே விதானையிடம் சொல்லி அலுவலிலே இறங்க வேண்டும்.

கந்தையா- அப்படியானால் அதோ வருகிறான் சோமு. அவனையும் அழைத்துக் கொண்டு கெதியாப் போ.

### காட்சி 2

- (விதானை வீட்டில்)

குமாரு - ஐயா விதானையாரே கேள்விப்பட்டீரோ? பெரியதொரு வில்லங்கம் வந்திருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதானே - அதென்ன காரியம்? சற்று விளங்கச் சொல்லுமேன்.

குமாரு - அது அந்தக் கிழவியின் வளவிலே தான். அவவுடைய வாசற் திண்ணையிலே ஒரு பிச்சைக்காரக் கிழவன் கோதாரி யாய்க் கிடக்கிறுன்.

விதானே - அட, இதென்ன கோதாரி! பிள்ளையார் கோயில் கொடி யேறுகிற காலத்திலேயா கொள்ளே நோய் வரவேணும். இதற்கு உடனே நடவடிக்கை எடுத்தாக வேணும். என்ன சொல்லுகிருய் சோமு?

சோமு - அதற்கென்ன யோசிக்கிறது. ஆளே உடனே அங்கிருந்து அகற்ற வேண்டியதுதான்.

விதானே - அவனே எங்கு கொண்டுபோய்ப் போடலாம்!

குமாரு - ஏன், அந்தப் பிள்ளையார் கோவிலுக் கப்பால் உள்ள காட் டிலே தறிகாரருடைய பழங் கொட்டிலொன்றிருக்கிறதே. அதிலே கொண்டு போய்ப் போட்டுவிட்டால் எவருக்கும் ஆபத்தில்லே. கண் காணுத காட்டிலே செத்தாலென்ன பிழைத்தாலென்ன தம்பிரான் செயல்.

விதானே - அது நல்ல புத்திதான். கெதியாக எழும்பு. நாலு பேரைப் பிடித்து வா நான் சொன்னதென்று. உடனே அலுவலேச் செய்து முடித்து விடுவோம்.

(வெளியேறுகின்றனர்)

## காட்சி 3

– (காட்டினுள்ளே பழுதடைந்த திறந்த கொட்டில். அத னுள்ளே யோசவ்வாஸ் நிலத்திலே படுத்தபடி, யோண் அருகிலே உட்கார்ந்து கொண்டு)

யோண் - கடவுளே, எங்கள் கெதி என்ன? இந்த நாலு நாட்களாக நான் நாட்டுக்குள்ளே போய் உணவு இரந்து வந்து எனது குருவின் பசியாற்றினேன். இன்று எனக்கு மிகவும் பெல வீனமாயிருக்கிறதே. வயிற்றோட்டத்திலுலே மிகவும் களேத் திருக்கிறேனே; நீர்தான் இன்று எங்களுக்கு உதவி செய்ய வேணும். தேவதாயே, செபமாலேயைத்தானும் சொல்ல முடியாத சோர்வாயிருக்கிறதே!

வாஸ் - ஆண்டவன் உத்தரவின்றி எதுவும் நடப்பதில்லே. அவர் எம்மை அழைத்தார். ஆம் என்று நாமும் வந்தோம்; கல்வாரிக்கு மேலே கழுமரச் சிலுவையிலே தனது பிரிய குமாரனே அறையவிட்ட அந்த நல்ல பிதாவே, எம்மையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நிலையில் வைத்திருக்கிறார். இத் தேசமக்கள் மெய் யான கடவுளை அறிந்து நேசிக்க உதவி செய்ய வந்தோம். அவர்களிடேற எமது உயிரை ஒப்புக் கொடுப்போம். செக மீட்பரின் பிராயச் சித்த பலியுடன் எங்கள் சீவ பலியை யும் ஒன்றிப் போமாக! (அயர்ந்து போகிறார்).

## காட்சி 4

- (காட்டிலே விறகு பொறுக்க வந்த பெண்)

தெய்வானை- அந்த அழி கொட்டிற்பக்கமாக அனுங்கற் குரலொன்று கேட்கிறதே. அது என்ன வென்று எட்டிப் பார்ப்போம். ஆனை முகத்தானே, அடியாளைக் காத்துக் கொள். (உள்ளே எட்டிப் பார்த்து) பிள்ளையாரே, இது என்ன பரிதாபம்! அந்த மனிதன் செத்த மாதிரிக் கிடக்குது. இந்தப் பொடி யன் தான் அனுங்குகிறது. ஓய் காணும், நீங்களாரப்பா, இங்கே என்ன செய்கிறீர்கள்? ( வாஸ் கண்விழித்துப் பார்த்தல் );

யோண் - (மெதுவாகத் தலையை உயர்த்தி) மாதாவே, உமக்கு நன்றி. எவரோ எங்களைக் கண்டுவிட்டார்கள்.

தெய்வானை- இன்னும் சாகவில்லை. என்னவென்று விசாரித்துப் பார்ப் போம். அடதம்பி, என்ன நடந்தது? எப்படி இங்கு வந்தீர்கள் என்று சொல்லு?

யோண் - நாங்கள் பரதேசிகள் பயணக் களையாலும் பசிக் கொடுமை யாலும் உடல் நலங் கெட்டுப் போனோம்; இங்கு வந்த பின்னர் வயிற்றோட்டம் வந்து விட்டது. அது கோதாரி யென்று பயந்து இங்கு கொண்டுவந்து போட்டுவிட்டார் கள். நடக்கப் பெலனில்லை. பசியாலே சாகிறோமம்மா.

தெய்வானை - இதென்ன பாதகச் செயல். அதுவும் பிள்ளையார் கோவி லிலே திருவிழா நடக்கும் போதா பக்கத்திலே நீங்கள் பட்டினியாலே சாக வேண்டும். அது கொடுமை, சற்றுப் பொறுத்திருங்கள். பிள்ளையாருடைய பங்கரிசி வீட்டிலே தானிருக்கு. அதிலே கொஞ்சங் கஞ்சி காய்ச்சிக் கொண்டு வாறேன். விக்கினேஸ்வரரை வேண்டிக் கொள்ளுங்கள், வியாதியெல்லாம் விரைவிலே சுகமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி 5

- (யாழ்ப்பாணக் கோட்டைக்குள்ளே கூட்டம். வான்றீட், பிரதானிகள், பாதிரிமார்):

சேவகன் - பராக்கு! கௌரவ கப்பித்தான் வான்றீட் வாழ்க!

எல்லாரும் - (எழுந்து நின்று) வணக்கம் ஐயா!

வான்றீட் - வணக்கம் நண்பர்களே, அமருங்கள். இந்த இலங்கையின் சிரமான வடபாக ஆளுநராக நான் பதவியேற்று மூன்று வருடங்கள் முடிகின்றன. மாட்சி மிக்க கொம்பனியாரின் பிரதிநிதியாகவும் திருத்தப்பட்ட தேவ திருச்சபையின் பாதுகாவலனுகவும் எனது கடமையை அயராது செய்திருக் கிறேன். அதற்கு வேண்டிய வசதிகளைத் தந்த தேவனுக்கு முதல் நன்றி கூறுகிறேன். அடுத்து என்னுடன் ஒத்துழைத்த உங்களுக்கு எனது நன்றியைத் தெரிவிக்கிறேன். கடந்த கால அறிக்கைகளை ஆராய்ந்து, வருகிற நாலாவது வருடத் துக்கு உற்சாகமாக உழைப்பதற்கு உபயமான ஒரு தீவிர திட்டத்தைத் திட்டவேண்டும். உங்களுடைய அறிவும் அனுபவமும் அதையுருவாக்க அவசியம். ஆகவே, உங்கள் யோசனைகளை வரவேற்கிறேன்.

சுந்தர முதலி - சென்ற ஆண்டிலே கம்பனி வியாபாரம் திருப்திகர மென்றே சொல்ல வேண்டும். பருத்தி, பனைமரம், சாயச்சீலை, யானை, கறுவா ஏற்றுமதி சுமார். நெல் விளை வும் நல்லாயிருந்தது. அடிமை வியாபாரத்தாலும், அதிக இலாபம் கிடைத்தது. வன்னியர்களும் தமது கப்பங்களை யனுப்பி ஒத்துழைக்கிறுர்கள். வருகிற வருடத்தில் இவற்றை யெல்லாம் விருத்தியாக்கலா மென்பது எனது நம்பிக்கை.

பாதிரி றேகன் - துரையவர்கள் பதவியேற்றது முதல் எமது திருத்திய வேத திருச்சபையின் விருத்தி வேகமாக வளர்ந்திருக்கிறது. பாப்பிசுகளை வேரோடுகளைய இயற்றிய சட்டமெல்லாம் துரிதமாக அமுலாக்கப்படுகின்றன. அதனுல் றேமைக் குருட்டாட்டம் முற்றுக நசுக்கப்பட்டுவிட்டதென்று சொல் லலாம். கிறித்தவ கோவில் வழிபாடும் உபதேசங்களும் ஒழுங்காக நடைபெறுகின்றன. ஞான தீட்சைகளின் தொகை பெருகுகிறது. இவை பற்றி மேலதிகாரிகள் மகிழ்ச்சியடைவார்களென்பது திண்ணம். இவற்றிற்கெல் லாம் இறைவனுக்கு நன்றி கூறுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வான்றீட் – கௌரவ கொம்பனியாரின் வியாபார வளர்ச்சியையும் திருத்திய திருச்சபையின் விருத்தியையும் நாட்டின் செழிப்பையும் செவிமடுத்து மிக மகிழ்ச்சி கொண்டேன். உங்கள் ஒத்துழைப்பினாலும் முயற்சியினாலும் இவை இன்னும் மேலோங்கும் படி இறைவனை இறைஞ்சுகின்றேன். புது ஆண்டுத் திட்டங்களை விரைவிலே சமர்ப்பிப்பீர்களென்று காத்திருக்கிறேன்.

சேவகன் - பராக்கு, கௌரவ கற்பித்தான் வான்றீட் வாழ்க!

## காட்சி 6

- (தெய்வானை கஞ்சியோடு வருதல்)

தெய்வானை- (கஞ்சியை இறக்கிவைத்து இரண்டு சிரட்டைகளைக் கொடுத்து) நல்ல குத்தரிசிக் கஞ்சி கொண்டு வந்திருக்கிறேன். எழும்பிக் குடியுங்கள். விநாயகர் கட்டாயம் சுகந் தருவார்.

யோசன் - போசனமற்றவர்களின் பசியாற்றும் பரம்பொருளான பிதாவே உமக்கு நன்றி. யேசுமரிசூசை இந்த உணவை ஆசீர்வதியுங்கள். (எழுந்து வார்த்து முனிவருக்குப் பருக்குதல்; தானும் குடித்தல்) அம்மா, மெத்தப் பெரிய உபகாரம். கடவுள் உங்களுக்குப் பன்முறை பலனளிப்பாராக!

தெய்வானை- உங்களுக்கு உதவி செய்வது எனக்குப் பெரிய பிரயாசையில்லை. அதிலே மிக மகிழ்ச்சி. தினமும் விறகுக்கு வரும் போது கஞ்சி கொண்டு வருவேன். நீங்களஞ்சவேண்டிய தில்லை. இதோ பாத்திரத்திலே குடிதண்ணீர் இருக்கிறது தாகந்தீர்த்துக் கொள்ளலாம். போய் வருகிறேன்.

இருவரும்- போய் வாருங்கள். (தோத்திரப்பாடல், செபம், இலங்கை மனந்திரும்ப மன்றாட்டு)

## காட்சி 7

(காட்டுக் கொட்டிலிலே தெய்வானையும் சீதாவும்; வாசும் யோனும் கஞ்சி குடித்தபின்).

வாஸ் - அம்மா, இத்தனை நாளாக எமக்கு உணவளித்து சாகக் கிடந்த எங்களுக்கு உயிர்ப்பிச்சை கொடுத்தீர்கள். அதற்கு உகந்த உபகாரஞ் செய்ய எங்களால் முடியாது. எல்லாம் வல்ல இறைவனே அதற்குக் கைம்மாறு தருவாராக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வானை - அதெல்லாம் ஆனைமுகத்தான் அருள்தானையா. அவனுக்கேன் ஐந்து கரம் தெரியுமா? மோதகம் வாழைப்பழம் சாப்பிடத்தானு? கேட்டதெல்லாம் அள்ளிக் கொடுக்க அல்லவா? சில காலத்தின் முன் இங்கு பலர் கோதாரி வியாதியால் இறந்தார்கள். அவ்வேளைதான் எனது மனிதனும் கைலாயம் சேர்ந்தார். அப்போது மாண்டவர்களிற் பலர் வியாதியின் வேகரத்தாலல்ல பசிபட்டினியாலேதான் இறந்தனர் எனக் கண்டேன். அதனுலேதான் மனிதரின் கோழைத்தனம் பெரிய பாவம் என உணர்ந்தேன். அது தான் உங்களுக்கு உதவி செய்யவும் துணிவு தந்தது. அதோடு எனது பேத்தி சீதாவும் உங்களுக்கு உணவு கொண்டுவர எவ்வளவு ஆர்வம் தெரியுமா?

வால்ஸ் - தாயைப் போலே பிள்ளை நூலைப் போலே சீலை என்பார்களே. பெரியோரின் முன் மாதிரியைத் தானே சிறுவர் பின் பற்றுவது இயற்கை.

சீதா - இந்த அப்பாவைப் பார்த்தால் எங்கள் பெத்தப்பாவைப் போலல்லவா இருக்கு. இவருக்கு உணவு கொடுத்தால் அவருக்கும் சுவறுமல்லவா, ஆச்சி. எங்கள் பூசாரி ஒரு நாளப்படிச் சொன்னது நினைவாயிருக்கு.

தெய்வானை - ஆம் பேத்தி, சீவாத்துமாவெல்லாம் பரமாத்துமாவோடு ஒன்று என்பது சித்தாந்தமல்லவா? வெளித் தோற்றத்திலேதான் வித்தியாசம்.

யோண் - உங்களுதவியால் நானிப்போது எழும்பி உலாவக்கூடியவனுகிவிட்டேன். ஆகையால் ஊருக்குள்ளே போய் உணவு தேடிவந்து பெரியவரைத் தாபரிக்க முடியும். இவ்வளவும் செய்த உதவிக்கு நன்றி கூறுகின்றோம். பரலோக அன்னை உங்கள் குடும்பத்துக்கு வேண்டிய சகல சம்பத்தையும் தருவாராக!

சீதா - அன்னை பராசக்தி, அகிலாண்டேஸ்வரி அவளைத்தானே நாங்கள் வாழ்த்தி வேண்டுதல் புரிகிறோம். இந்த அண்ணனும் அப்படித்தானே செபிக்கிறார், எல்லாருமொரு மாதிரித் தானே. இல்லையா ஆச்சி?

வால்ஸ் - கருணைக் கடலான கடவுளையும் அவருடைய அன்பு நிறை அன்னையையும் வழிபட்டு வேண்டுதல் புரிவதே முறை. அதனுல், வாழ்வில் வரும் இன்னல் எல்லாம் விலகும். கடைசியில் முடிவில்லா இன்பமும் கிடைக்கும். இதுவே சான்றோர் அறிந்த அனுபவம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வானை - எனது குடிசை மேற்கு வீதி, வடகோடியருகே இருக்கிறது. இடைக்கிடை அப்பக்கம் வாருங்கள். சீதாவுக்கும் சந்தோசமாயிருக்கும். எமது அயலாரும் இனி அச்சமின்றி உங்களுக்கு உதவி செய்வார்கள்.

சீதா - ஆமப்பா, அடிக்கடி அப்பக்கம் வாருங்கள். எப்படி இருக்கிறீர்களென்று பார்க்க எனக்கு ரொம்ப ஆசை. மறந்துவிடவேண்டாம்; சென்று வருகிறோம்.

வாஸ் - சென்று வாருங்கள். சேகமீட்பரின் அன்பும் ஆசியும் உங்களோடிருப்பதாக!

# அங்கம் III

## கத்தோலிக்கரைக் கண்டு பிடித்தல்

### காட்சி 1

- (ஒரு மண்டபத் திண்ணையில் இருவரும் செபமாலைத் தியானம் முடித்தல். ஒரு கீதம் பாடல். பின்னர்).

வாஸ் - மகனே, கடந்த சில வாரங்களாக இந்த யாழ்ப்பாணப் பட்டணம் முழுவதையுமே சுற்றி வருகிறோம். எனது கழுத்திலே தொங்கும் செபமாலை மனிதரை மதிக்கும் உரை கல்லாயிருக்கிறது. சைவர் எம்மைச் சாதுவும் சீடனும் என்கிறார்கள். கழுத்தில் அணிந்திருப்பது அக்குமாலையாம். அறிவு குறைந்த சிறார் சிலவேளை எம்மைப் பரிகாசஞ் செய்கின்றனர். வேறு சிலரோ விசேட தயவு காட்டுகின்றனர்.

யோசேப் - ஆம் குருவே, இவர்கள் பழைய கத்தோலிக்கர் என்பதே எனது எண்ணம்.

வாஸ் - உண்மைதான். இவர்கள் மறைவாகவே சத்திய வேதத்தை அனுசரிக்க முடியும். எங்களையும் அவர்கள் நம்ப அஞ்சுவார்கள். அவ்வளவுக்கு அதிகாரிகளின் அட்டூளியம் அதிகரித்திருக்கிறது.

யோசேப் - வாஸ்தவம். யானை விதானை பவுலு பெரிய தனவந்தராம். பழைய கத்தோலிக்க குடும்பத்தவராம். எனினும் அவருடைய வீட்டிலே அனுதாபந் தவிர வேறொரு அடையாளத்தையும் காணோமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாஸ் - அவருடைய மனைவி அந்தோனியா எவ்வளவோ தயவு காண்பிப்பது தெளிவு. ஆயினும் வெளியாக வேதத்தை அனுசரிக்க அவர்கள் துணிவார்களா என்பதே கேள்வி.

யோசண் - கடலருகிலிருக்கும் எம்மான் வீட்டிலம்மாள் எப்படி? "யேசு வாழ்க" என்றபோது "மரி வாழ்க" என்று விடை கூறியது துணிவு தானே; தான் பாப்பு வேதம் என்று சொன்னதும் அவ ஒருத்திதானே. அவ மூலம் நம்பிக்கையான விசுவாசிகளை அறிந்து கொள்ளலாமென நம்புகிறேன்.

வாஸ் - நாமிங்கு வந்து சேர்ந்து ஆறு கிழமை ஆகின்றன. இனியாகிலும் நமது கைங்கிரியத்தைத் தொடங்கவேண்டும். தேவ மீட்பரும் நம்முடனிருக்கிறார். விமரிசையின் பெயராலே வெகுகாலம் காத்திருப்பது சரியில்லை. இனித் துணிந்து வினவவேண்டியதுதான்.

## காட்சி 2

- ( எம்மானுவேல் சில்வா வீடு )

மொனிக்கா - இங்கே சாருமேன், அந்தப் பிச்சைக்காரனைப் பற்றி என்ன நினைக்கிறீர்?

எம்மான் - அந்த மனிதனைப் பற்றித்தான் எனக்கும் யோசனையாயிருக்கிறது. கழுத்திலே தொங்கும் செபமாலை அவர் ஒரு பொது வேதக்காரனென்பதை வெளியிடுகிறது. அவர் தோற்றம் உயர்குடிப் பிறந்தவரெனக் காட்டுகிறது. அவர் பேச்சு வடக்கர் உச்சரிப்பாயினும் பண்பட்ட படிப்பாளி என்பதை விளக்குகிறது. ஏழைக் கோலமானாலும் அவர் முகத்திலோர் அமைதி, செந்தளிப்பு, வசீகரம், பரவசம் சொலிக்கிறது. இதிலேதோ மர்மமிருக்கலாமென்றே எண்ணுகிறேன்.

மொனிக்கா - நேற்றுத்தான் அவர் இங்கு வந்தபோது யேசு சபையார் யாராவது இந்தப் பக்கங்களில் இல்லையோ என்று விசாரித்தார். அதற்கு நான், 1658 ல் கல்தெயிரோ சுவாமி கொலையுண்ட பின்னர் எவருமே இங்கு காலடிவைக்கவில்லையென்றேன். அதற்கவர், பாவிகளுக்கடைக்கலமான பரலோக இராக்கினியிடம் உருக்கமாக மன்றாடினால் ஒரு குருவை விரைவிலனுப்புவார் என்று சொன்னார்.

எம்மான் - ஒரு வேளை அவரே குருவாக இருக்கவும் கூடுமோ? விசாரிக்கத்தான் வேண்டும். அடுத்த முறை அவர் இந்தவழி வரும்போது தவறாமல் அவரை மறித்து வைத்துக் கொள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளவும். நானவருடன் தனிமையிற் பேசி உண்மையை அறிந்து கொள்ள வேண்டும். 30 ஆண்டுகளாக நாமனுப விக்கும் ஆன்ம பசியைத் தீர்க்கும் நாளென்று வருமோ?

## காட்சி 3

- ( வேறோரு நாள் அதே வீட்டில் )

லூசி - அம்மா, நீங்கள் தேடிய கிழவனும் பொடியனும் வருகிறார்கள்.

மொனிக்கா - நல்லது. உடனே போய் அப்பா அறையில் இருக்கிறாரா என்று பார்த்து வாரும்.

வாசகம் யோர்னும்• யேசு வாழ்க!

மொனிக்கா- மரிவாழ்க! வாருங்கள். அமர்ந்திருந்து ஆறுங்கள். பசியாறப் போசனங் கொண்டு வருகிறேன்.

லூசி - அப்பா கந்தோரில் இருக்கிறார். தொம் பேதுருவுடன் கதைத்துக் கொண்டிருக்கிறார். வெளியாலே வேறிருவர் உட்கார்ந்திருக்கிறார்கள்.

மொனிக்கா- (போசனம் அளிக்கிறாள்) அப்பாவிடம் போய் அவருடைய காதுக்குள்ளே அந்தக்கிழவனும் பொடியனும வந்திருக்கிறார்களென்று சொல்லிவிட்டுவாரும். (லூசி போதல்) வயோதிபரே, எங்கள் வீட்டுக்காரர் உம்மைக் கண்டு கதைக்க வேண்டு மென்று சொன்னார். ஆகையால் தயவு செய்து சிறிது நேரந் தங்கிப் போகமுடியுந்தானே?

வாஸ் - ஆண்டவனலுவலொழிய எனக்கு வேறேது வேலை. எவருக்காவது ஏதுமுதவி செய்யக் கூடுமானால் அதற்கு எவ்வளவு நேரமும் காத்திருப்பேன்.

எம்மான் - (சிறுமியுடன் உள்ளே வருகிறார்) வணக்கம் வயோதிபரே!

வாஸ் - வணக்கமையா, தங்கள் வருகைக்கே காத்திருக்கிறேன்! தாங்கள் வினவவேண்டிய விடயம் எதுவோ?

எம்மான் - அதுபற்றிச் சிறிது தனிமையிலே கதைக்க வேண்டும். ஆதலால் அடுத்த அறைக்கு என்னுடன் வருவீர்களா?

வாஸ் - அதற்கு ஆட்சேபனை எதுவுமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்சி 4

(பவுலு டே பர்ரொஸ் வீட்டிலோரறையில்)

எம்மான் - இன்று அதிசயமான ஒருசம்பவம் அறிந்தேன் ஐயா.

பவுலு - அப்படியென்ன புதுமை. இப்ப, யாழ்ப்பாணத்தில்? எல்லாம் அடக்கு முறையில் நடக்கும் போதிலா? சரி சொல்லுமேன், கேட்டுப் பார்ப்போம்.

எம்மான் - இந்த ஒரு மாதமாக எங்கள் தெருக்களில் ஒரு தபசியையும் சீடனையும் கண்டிருப்பீரல்லவா? அந்தக் கிழவன் கழுத்திலோர் செபமாலை அணிந்திருப்பார். அவரைப் பற்றித்தான் கதை.

பவுலு - அவர்கள் எமது வீட்டுக்கும் சில தருணம் யாசிக்க வருவதுண்டு. அவரொரு கத்தோலிக்க துறவி என்கின்றனர் சிலர். ஆனலொரு வேளை கத்தோலிக்கரைக் கண்டு பிடிக்கக் கொம்பனியார் விட்ட வேவுகாரனுகவு மிருக்கலாம். ஆகையாற்தான் அவர்களைப் பற்றி மெத்தக் கவனமாகயிருக்கும்படி வீட்டிலுள்ள யாவருக்கும் கட்டளையிட்டிருக்கிறேன்.

எம்மான் - இந்த நாட்களில் விவேகம் விமரிசை மெத்த அவசியந்தான். நானும் ஐமிச்சப்பட்டேன். பலநாள் அவரை அவதானித்த பின் இந்த மனிதன் வெறும் வேடதாரியாயிருக்க முடியாதென எனது மனதிற் பட்டது. எனவே, மனந்துணிந்து அவரை அழைத்து விசாரித்தேன்.

பவுலு - விசாரணையிலிருந்து வெளியானதென்ன?

எம்மான் - அவர், தான்கோவை ராச்சியத்தைச் சேர்ந்த கொங்கணிக் குருவாம்; இலங்கையிலே சாதாரண கிறித்தவர்கள் படும் பெருந்துயரங்களைப் பற்றிக் கேள்விப்பட்டு இங்கு வந்து உதவி செய்ய விரும்பினுராம். பல பிரயத்தனங்களின் பின் உத்தரவு பெற்று ஆண்டவன் அருளால் இங்கு வந்து சேர்ந்தாராம். கத்தோலிக்கரைக் கண்டுபிடித்து அவர்களுக்கு இயன்ற உதவி புரிவதே அவருடைய ஒரே வேலை என்றுர்.

பவுலு - அப்படியாயின் அதற்கான அத்தாட்சிகளேதும் அவரிடமுண்டா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மான் - உண்டு. குருப்பதவி அத்தாட்சிகள், அதிகாரப் பத்திரங் கள்,பலிப்பூசைப் பாத்திரங்கள் ஆதியன அவருடைய சாக் கினின்று எடுத்துக் காட்டினூர். அவையுண்மையென்று கண்டுதான் உம்மிடம் அறிவிக்க அவசரமாக வந்தேன்.

பவுலு - இவையுண்மையானல் அவரை எங்கு எப்போது சந் திக்க முடியும்? அவர் தங்குமிடம் உமக்குத் தெரியுமா?

எம்மான் - தெரியாது. ஆனல் நாளைக் காலை மீண்டும் எனது வீட் டுக்கு வரும்படி சொல்லியிருக்கிறேன். அவர் வந்தவுடனே இங்கு அனுப்பி வைக்கிறேன்.

பவுலு - மெத்த நல்லது. நாளைக்கே நாங்கள் நன்மை பெற வேண்டிய ஒழுங்குகளைச் செய்யலாம். கருணைக் கடவுள் நமது சீவிய நாட்களிலேதானே இந்தக் கிருபையைச் செய்ததற்கு எவ் வாறு நன்றி கூற முடியும். ஆனற் கவனம். எல்லாம் மிக அமைதியாக நடைபெற வேண்டும். பலருக்கும் அறிவிக்கப் போனல் பரபரப்புண்டாகி விடும். எனவே, நம்பிக்கையான வெகுசிலரையே அழைக்க வேண்டும். நாளைக்கு இருண்ட பிறகு இங்கு வாருங்கள்.

எம்மான் - மெத்தச் சந்தோஷம், வருகிறேன்.

பவுலு - வணக்கம், சென்று வாரும்.

## காட்சி 5

பவுலு தே பர்ரொஸ் வீட்டு அறையொன்றில். இரவு 10 மணி. 4 குடும்பத்து ஆட்கள் மட்டும். வழிபாடு. யோண் ஒரு மேசையில் பீடஆயத்தம் செய்தல். 1. பிரசங்கம் 2. பாவசங்கீர்த்தனம், 3. ஞானஸ்நானம், 4. விவாகம் 5. பலிப்பூசை, இவற்றைக் கூட்டிக் குறைத்துக் காட்ட லாம். இங்கு சில குறிப்புகள் மட்டும்.

யோசவாஸ் - கிறிஸ்து யேசுவிலும் மரியதாயிலும் எனது அருமை 1. யான சகோதரரே. எம்மை இன்று ஒன்று சேர்த்த நல்ல கடவுளுக்கு உள்ளம் நிறைந்த நன்றி கூறுவோம்.

திருச்சபையின் அத்திவாரமான பேதுரு பாவிலு அப் போஸ்தலர்கள் கடவுளுக்கும் கிறிஸ்துவுக்கும் சாட்சியாக ரூமையிலே உதிரஞ் சிந்தி உயிரைப் பலி கொடுத்தார் களே. அதை நினைந்து கத்தோலிக்க உலகம் இன்று களி கூருகின்றது. கல்வாரிக் குன்றிலே உலகமீட்புக்காக உயி ரைப் பலியாக்கிய அதே கிறிஸ்துவை எத்தனையோ வரு டங்களின் பின் நாமும் இன்று ஒப்புக் கொடுக்கப் போகின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றோம். அவரோடு நாமும் கடவுளுக்கே முழுதும் சொந்தம் என்பதை அறிக்கையிடப் போகிறோம். நாம் அவருடைய பிள்ளைகள். ஆகையால், அவருடைய விருப்பத்தின்படியே வாழத் தயாராயிருக்கிறோம்.

ஆதித் திருச்சபை அஞ்ஞான உலகிலே பட்ட பாட்டையே நாமும் படுகிறோம். அவர்கள் எவ்வளவு துணிவோடும் மகிழ்ச்சியோடும் துன்ப துரிதங்களை ஏற்றுக் கொண்டார்களோ அவ்விதமே நாமும் அவற்றை அனுபவிக்க ஆயத்தமாயிருக்கவேணும். கிறிஸ்துவின் வெற்றியிலே பங்குபற்ற விரும்பும் நாங்கள் அவருடைய பாத்திரத்திலே பருக வேண்டுமென்பது நீதியல்லவா? கிறிஸ்துவைப் போல நாமும் பாடுகளினூலும் மரணத்தினூலுமே உத்தானத்தின் மகிமையை அடையவேண்டும். அவருடைய பலியிலே பங்கு பற்றிப் பிரசாதத்தில் ஒன்றிக்கும் பாக்கியம் இன்று எமக்குக் கிடைத்ததற்கு நன்றி சொல்லுவோம்.

முதலில், நாம் மனித பெலவீனத்தாற் செய்த தவறுகளுக்குத் துக்கப்பட்டுப் பொறுத்தல் கேட்டுப் பாவ சங்கீர்த்தனஞ் செய்வோம். அடுத்து ஞானஸ்நானச் சடங்கிலே எமது வாக்குத்தத்தங்களைப் புதுப்பிப்போம். அதன் பொருளைப் புரிந்து நாளாந்தம் பின்பற்றத் தெண்டிப்போம். அதன் பிறகு மெய்விவாக தேவ அனுமானம் இடம் பெறும் குடும்பம் திருச்சபையின் பிரதிமை என்பதை விளங்குவோம். கடைசியாக எல்லாரும் பூசைப் பலியில் எங்களை யேசுவோடு கடவுளுக்கு ஒப்புக்கொடுத்து நற்கருணை மூலம் நம்மை அவருடன் ஒன்றிப்போம். அதன் பின் நமது வாழ்க்கை எனும் சிலுவையின் பாதையிலே எல்லாரும் ''சருவேசுரனுக்கு நன்றி'' என்று சொல்லிக் கொண்டு நடக்க முடியும்.

2. (பாவசங்கீர்த்தனத்துக்குச் சிறிய பொது ஆயத்தம். அதன் பின் தனி அறிக்கை செய்தல்)

3. (ஞான முழுக்குத் தனிமையாகப் பெற்றவர்கள், அதாவது 1658க்குப் பின் பிறந்தவர்கள் சடங்கிலே பங்கு பற்றுவர். எல்லாரும் வாக்குத் தத்தம் புதுப்பிப்பர்).

4. (விசேட சட்டப்படி விவாகமானவர்கள் குருவின் ஆசியைப் பெறுவர்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. (பலிப் பூசையின் சில பகுதிகள்)

(இவை முடிந்த பின் எல்லாரும் ஒருமிக்க இருந்து சரீர உணவு அருந்தல் — முன் பின் செபம் சொல்லல்):

## காட்சி 6

(பவுலு தே பர்ரொஸ் வீடு, யோசவ்வாஸ் ஓரறையிலிருக்கிறார்)

பவுலு - (உள்ளே வந்து) பிதாவே கடந்த இரு கிழமையாக இந்தப் பட்டணத்தின் பல பகுதிகளிலும் பலிப்பூசை ஒப்புக்கொடுத்து அருட்சாதனங்கள் அளித்து விசுவாசிகளைத் தேற்றினீர். நெடுங்காலம் இங்கு பதித சத்துராதியருகிலிருப்பது ஆபத்தானது. ஆகவே, வேறிடம் போக ஆயத்தம் செய்திருக்கிறோம்.

வாஸ் - மற்ற ஆடுகளையும் தேடவேண்டியது கடமை தானே. அதற்கும் இடமாற்றம் வசதியாயிருக்கும்.

பவுலு - இங்கிருந்து 10 கல் தொலைவில் ஒரு கத்தோலிக்க கிராமமுண்டு. அதன் பெயர் சில்லாலை. அங்கு வாழ்பவர்கள் விசுவாச வைராக்கியமும் ஒற்றுமையும் தியாக சிந்தையுமுடையவர்கள். அங்கே காபாந்தாகத் தங்கி முழுக்குடா நாட்டிலும் கைங்கிரியம் நடத்த முடியும்.

வாஸ் - உங்கள் விருப்பத்திலே நான் தேவனின் திருச்சித்தத்தையே காண்கிறேன். தனது அதிமிக மகிமைக்கு உபயமானதையே அவர் ஒழுங்கு செய்வாரென்று நம்புகிறேன்.

பவுலு - தந்தையே, தங்களைவிட்டுப் பிரிவது எமக்குப் பெரியவிதனமாயிருக்கிறது. ஆயினும் எமது பரிசுத்த வேதவிருத்திக்கும் ஆன்மாக்களின் வளர்ச்சிக்கும் எமது இழப்பு அவசியமாகிறது. தங்களை மீண்டும் அடிக்கடி சந்தித்துப் பிரசாதம் பெறமுடியுமென்ற நம்பிக்கை ஆறுதலளிக்கிறது. உங்கள் அனுதின செபத்தில் எங்களையும் சேர்த்துக் கொள்ளுமாறு தாழ்மையுடன் வேண்டுகிறேன்.

வாஸ் - நாமெல்லோரும் கடவுளின் உபகரணங்களென்பதை மறக்கப்படாது. அவருடைய ஒழுங்கை விளங்கிச் செய்தால் அவருடைய மக்களாகும் பாக்கியம் பெறுகிறோம். விரும்பாது எதிர்த்தாலோ மனிதர் தமக்கே நிர்ப்பாக்கியத்தை வருவித்துக் கொள்கிறார்கள். அவர் அழைக்குமிடத்துக்கே நாம் விரைய வேண்டும். எனவே, பயணத்துக்கு வேண்டிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயத்தங்களைத் தயங்காது செய்யும். ஆண்டவரின் ஆசி உம்முடனிருப்பதாக!

பவுலு - உடனே ஆட்களுக்குச் சொல்லியனுப்புகிறேன். இன்றிரவு தானே புறப்பட ஆயத்தமாயிருங்கள். போய் வருகிறேன்.

வாஸ் - போய் வாரும்.

# அங்கம் IV

## சில்லாலையில்

### காட்சி 1

(சில்லாலை மத்தியில் மூப்பரின் எட்டுச்சார் வீட்டின் உள் முற்றத் திண்ணையிலே யோசவ்வாஸ் வாசித்துக் கொண்டிருத்தல்)

மூப்பர் - (உள்ளே வந்து) யேசு வாழ்க! முனிவரே.

வாஸ் - மரிவாழ்க! மகனே. இதோ இங்கே உட்காரும்.

மூப்பர் - புது இடத்திலே நித்திரை எப்படிச் சுவாமி? நேற்று நடந்த களையும் அலுப்பும் இலேசாக மாறாதே!

வாஸ் - எத்தனையோ மாதங்களின் பின் இங்கு அமைதியாக நித்திரை செய்ய முடிந்தது. வேத விரோதிகளின் கிட்டுரங்களுக்கிடையே இத்தகையதோர் கத்தோலிக்க கிராமமிருப்பது பெரிய அதிசயந்தான்.

மூப்பர் - ஆம் பிதாவே. ஆண்டவரின் அறிவு வல்லமைக்கு இவ்வூரும் ஒரு சான்று எனலாம். இக்கிராமம் ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகளின் முன்தான் தொடங்கியது.

வாஸ் - ஏன், எப்படியென்று சொல்லலாமா?

மூப்பர் - அது நீண்ட கதை. யாழ்ப்பாணம் பறங்கியர் ஆட்சிக்குள்ளான பின்பு யேசுசபைக் குருமார் பண்டத்தரிப்பு, தெல்லிப்பளை, வட்டுக் கோட்டை போன்ற பல இடங்களில் பங்குக் கோவில் பள்ளிக்கூடங்களை நிறுவினார்கள். இவ்விடம் பண்டத்தரிப்பிலிருந்து ஒரு மைல் தூரம், வெறுங் காடாயிருந்தது. சில இடங்களிலே தனியாட்கள், தனிக் குடும்பங்கள் மனந்திரும்பினார்கள். அவர்கள் இனசனர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தள்ளிவைத்துத் துன்பப்படுத்தினர்கள். அவர்கள் அமரிக்கையாக வந்து வாழுவே இந்தக் குடியிருப்பு உண்டானது.

வாஸ் - இவ்வித சம்பவம் இந்தியாவிலும் பல இடங்களில் நடந்தது. எந்தத் தப்பறையை ஏற்றாலும் பரவாயில்லையாம். ஆனால் சத்திய வேதத்தை மட்டும் ஏற்றுக் கொண்டால் உடனே சாதியிற் கெட்டவனென்று கரிபூசித் துரத்திப் போடுவார்கள்- என்னே எம்மவரின் அறிவீனம்!

மூப்பர் - இங்கு வந்த புதுக் கிறித்தவர்கள் ஆதித் திருச்சபையிற் போல ஒன்றித்துவாழ வழிபிறந்தது. வேத சத்தியங்களைப் படித்து அதன்படியே சீவிக்க அவர்களைப் பயிற்றினர் குருமார். ஊரின் நடுவிலொரு பெரிய வளவிலே சிறிய கோவிலமைத்தனர். அதே அவர்கள் வாழ்வின் மையமாக விளங்கியது.

வாஸ - ஒல்லாந்தர் வந்தபோது அதைப் பறிமுதலாக்கவில்லையா?

மூப்பர் - இது ஒரு புறம் போக்கான இடம். அதோடு நாம் அலுவலிலே முந்தி விட்டோம்- கோவில் வளவிலே அங்குமிங்கும் குடிசைகளை அமைத்தோம். கோவிலையும் பிடுங்கி எட்டுச்சார் வீடாகக் கட்டினேம். அதுதானிது, ஒரு முற்றம் கோவில் மறு முற்றம் வீடு. இப்போது என் வீட்டினூடாகவே இங்கு நுழைய முடியும்.

வாஸ் - வேத விரோதிகளின் பிளக்காட்டுகளுக்கு எப்படித் தவறினீர்கள்?

மூப்பர் - அநியாயமான சட்டங்களை அமுலாக்க வந்த கட்டளைகாரரும் பட்டாளத்தாரும் சிலதரம் சண்டித்தனம் செய்யத் தெண்டித்த பின் தோல்வியுற்றுப் போயினர். குருவில்லாத வேளையிலும் தேவ வழிபாடும் வேத கல்வியும் இங்கு குறைபடவில்லை.

வாஸ் - இதுதான் கல்லின் மேல் அத்திவாரம் போட்டுக் கட்டின வீடு. வேத அறிவும் தியாக சிந்தையும் சேர்ந்தபோது எந்தச் சூறாவளியைத் தானும் எதிர்க்கும் சக்தியுண்டு.

மூப்பர் - ஆமாம். இந்த விசுவாசக் கோட்டையைத்தாக்கித் தகர்க்க முடியாத பதிதர் வடுவக்கணம் சொல்லிச் சன்னைசரசம் செய்ய முனைந்தனர்.

வாஸ் - அதெப்படி? வாலறுக்கப்பட்ட நரிபோலவா? ஆதித் திருச்சபைச் சரிதையிலும் அப்படி நடந்ததுண்டு.

மூப்பர் - இதுதான் இன்று எமக்குப் பெருமையாயிருக்கிறது. "சின்னரோமை" எனும் சீரான பேர் அவர்கள் பழிமொழியாக எமக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குச் சூட்டியது. காட்சியாக மத்தில் வரும் ''பபிலோன்'' என்று பாப்பாண்டவர் வசிக்கும் ரோமையைப் பழிப்பர். அது போலவே பாப்பிசுகள் வசிக்கும் இந்த ஊரையும் சின்ன ரோமை என்றனர் பதிதர்.

வாஸ் - அறியாமை எத்தனை விபரீதங்களைத்தான் உண்டாக்குகிறது.

மூப்பர் - ஏன், எங்கள் பெற்றோரின் இனசனரும் இவர்களைப் போல வே பொய்களைப் பரப்பி எம்மவரை அவமானப் படுத்தப் பார்த்தனர். அவர்களுக்கு வேதப்பற்றிலும் சாதிப்பெருமைதான் பிரதானமாயிருந்தது. எனவே இதற்கு எளியவர் குடியேற்றம் என்றொரு வசை மொழியை இயற்றிவிட்டனர். ஆயினும் இங்கு சிவன் கோவிற் பிராமணரும் சங்கிலியன் சந்ததி மடப்பளிகளும் வந்து குடியேறியது அவர்களறிந்தது. இவர்கள் சாதிப்பெருமை சருவேசுரளின் பிள்ளைகளாகும் சகோதரத்துவத்தின் முன் சாணி, சகதியே யென வீசி விட்டுவந்தவர்கள். இதையறியாத உலகாதாயகாரர் மெய்யிலுமதிகம் பொய்யையே நம்புவது வழமை.

வாஸ் - தேவனுடைய திருச்சபையிலே மனிதருண்டாக்கிய வித்தியாசங்களில்லை, எல்லாரும் ஒரே கடவுளின் பிள்ளைகள், ஒரே குடும்பம். கிறிஸ்துவின் ஞான அங்கமாவதற்கு அது அல்லவா முதல் நிபந்தனை?

மூப்பர் - கடவுள் பெரியவர், எங்கள் பிதா என்பதை அறியாதவர்கள் எப்படியதை விளங்க முடியும். நமது மூதாதைகள் தம் முன்னோர் தெய்வமாக்கின மனிதரை, அவர்கள் துன்மார்க்கத்துக்கே மாதிரிகளாயிருப்பினும், கடவுளென்று நம்பினார்கள். அது போலவே ஒல்லாந்தரும் சத்திய வேத போதனையைத் தப்பறையென நம்புகிறார்கள். ஆனால் உண்மையையடையப் பிரயாசை தியாகமின்றிச் சாத்தியப்படாது தானே.

வாஸ் - பாடின்றிப் பட்டமில்லை; சிறு பராயத்திலேயே பிழையைப் பற்றிக் கொண்டால் அதைப் பின்னர் விட்டுவிலகுவது மிகக் கடினம். மனிதர் அதிகமாகப் புத்திப் படியல்ல உணர்ச்சி ஊக்கப் படியே வாழ்கின்றனர்.

மூப்பர் - எனவேதான் வாரந்தோறும் சிறுவர்க்குச் சன்மார்க்க பாடம் பயிற்றுகிறோம். முதியோரின் மாதிரியே பிரதானமாதலால் வளர்ந்தவர்களும் திருமறையைக் கிரமமாகப் படிக்கின்றோம். எமது முயற்சிக்கு வெகுமதி போல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வோ தேவன் தங்களை எங்களிடை அனுப்பி ஆசீர்வதித்திருக்கின்ருர்?

வாஸ் - அதோ, ஆரோ ஒருவர் வாசலில் நின்று உம்மைத்தேடுவது போலிருக்கிறது.

மூப்பர் - ஆம், சுவாமி. அவரை அனுப்பிவிட்டுப் பின்பு வந்து தேவரீரைச் சந்திக்கிறேன்.

வாஸ் - தேவனும்மை ஆசீர்வதிப்பாராக!

மூப்பர் - சருவேசுரனுக்கு நன்றி!

## காட்சி 2

(கோயிலுக்கு மேற்கேயுள்ள வீட்டு முற்றும். அன்னு தண்ணீருடன் வந்து)

அன்னு - அந்தாம், தம்பி!

அந்தாம் - என்ன அம்மா, வாறேன். (கோடிப்பக்கத்திலிருந்து ஓடி வருதல்)

அன்னு - இங்கேவா, இன்றுனக்குச் சரியாய்த் தாறேன். எத்தனை தரம், உனக்குச் சொல்லுகிறது கோவிற்புறம் போய்ச் சுவாமியின் செபத்தைக் குழப்பாதே என்று.

அந்தாம் - நானங்கே போகவில்லையே. கோடிக்கையல்லோ வீடுகட்டிக்கொண்டிருந்த நான்.

அன்னு - ஓம் குறும்போடு கூடப் பொய்யும் சொல்லத் தொடங்கிவிட்டாய் (சிறுவனைப் பிடித்துத் தடியால் சிலதரம் அடித்தல்).

அந்தாம் - ஐயோ! ஐயோ, நான் போகவில்லை, நான் பொய் சொல்லவில்லை.

அன்னை - திரும்பவும் பொய். வாய் பொத்து. இனிமேல் அந்தப் பக்கம் நினைக்கவும் படாது. (இன்னும் அடி போடல்)

அந்தாம் - ஐயோ! சுவாமி, அம்மா அடிக்கிரு,

அன்னை - டேய், சத்தம் போடாதே.

அந்தாம் - போடாமலென்ன செய்கிறது. இப்ப பாரேன், போய்ச் சுவாமியைக் கூட்டிக் கொண்டு வாறேன்.

அன்னு - நானிந்த இரண்டு கண்ணுலும் கண்டதையா மறைக்கப் பார்க்கிருய். நான் தண்ணீரள்ளப் போன போது திறந்திருந்த பின் கதவுக்குள்ளாலே கண்டதென்ன? நீயங்கே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முட்டுக்கு முன்னலே நிற்கவில்லையா? என்னைக் கண்டவு டனே கள்ளப் பூனை மாதிரி ஓடி வந்து கோடிக்கை ஓட் டிக் கொண்டு நின்று விட்டு வருகிருய். எப்படியுனக்கிந் தத் தந்திரம் வந்ததோ தெரியவில்லை.

அந்தான் - ஏன், வாவேன் இப்பபோய்ச் சுவாமியைக் கேட்டுப் பார்ப்போமே.

## காட்சி 3

(அந்தான் பின் கதவடியில் அழுது குரற் காட்ட முனி வர் வெளியே வருகிருர்):

வாஸ் - என்ன தம்பி, ஏன் அழுகிருய்?

அந்தான் - (அழுதழுது) சுவாமியின் செபத்தைக் குழப்பினதென்று அம்மா என்னை அடிக்கிரு. நானிங்கு வந்தனுனு?

வாஸ் - மெய்யே அன்னு, மகன் என்ன குழப்பம்?

அன்னு - நான் தண்ணீருக்குப் போகும் போது இவன் முட்டுக்கு முன்னலே நின்றதை இந்த இருகண்களாலே கண்டேன் சுவாமி. நான் திரும்பிவருமுன் வீட்டை ஓடிப்போய் விட்டு, எனக்குப் பொய் சொல்லுகிருன். அதற்குத்தான் இரட்டைச் சம்பளம் கொடுத்தேன்.

அந்தாம் - நானிங்கு வந்தேனே? சுவாமி நீங்களே சொல்லுங் களேன். ஆர் பொய் யென்று பார்ப்போம்.

வாஸ் - நீ வரவில்லைத் தான்.

அன்னு - அப்போ, ஆர் அங்கே உங்களருகில் நான் கண்டது?

வாஸ் - அதுவா, அது ஆரோ, அது உன் மகனல்ல, அது உனக் குத் தேவையில்லை (புன் முறுவல்).

அம்மா, அடிச்சா நோகிறதா? (அந்தானின் முதுகைத் தடவிவிட்டு) காய மொன்றையுங் காணவில்லையே.

நோவெல்லாம் வளர முன்னம் மாறிவிடும். நீ ஓடிப்போய் விளையாடு. (அந்தான் ஓடல்).

அன்னு ஏனப்படிச் சிறுவனை வீணுய் அடித்தாய்?

அவனிங்கு வரவு மில்லை, என்னைக் குழப்பவுமில்லை. சரி, நீயேதோ கண்டதென்று சொன்னுயே. அதை வேருெரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருக்கும் சொல்லிவிடாதே. ஆண்டவர் உன்னை ஆசீர் வதிப்பார்.

அன்ரு - அப்படியே ஆகட்டும் சுவாமி, நான் போய் வருகிறேன். வணக்கம்.

## காட்சி 4

(மூப்பர் இன்ருசி வீட்டில்)

கமீல் - கேளுமேன் மூப்பர், எங்களூரிலும் சில யூதாசுகள் இல்லாமற் போகவில்லை.

இன்ருசி - ஆரைப்பற்றிப் பேசுகிறீர்? மருந்து மாதா கிருபையால் இன்னுமொரு அசம்பாவிதமும் நடக்கவில்லையே!

கமீல் - அந்தக் காயர் பிறஞ்சரைப் பற்றித்தான். ஞாயிற்றுக் கிழமை கூலிவேலை செய்விக்க வேண்டாமென்று சுவாமி சொன்ன பிறகும் இந்த முட்டாள் செய்வதைப் பாருமேன். நாளைக்கு ஞாயிறு வீடு வேயவென்று ஆயத்துறை ஆட்களுக்கு சொல்லிவிட்டு வந்திருக்கிருர்.

இஞ்ஞாசி- அது பெரிய துன்மாதிரியா யிருக்கப் போகுதே. கணக் காயர் உத்தியோக மென்ற கர்வமோ, அல்லது நாங்கள் கொடுத்த இடக்கேடோதான் காரணம். ஞாயிறு அவருக்கு மெத்த வசதிதான். ஓசியிலே ஆட்கள் கிடைக்கும். அதோடு தானும் லீவெடுக்கத் தேவையில்லை. ஏதோ முனிவருடன் யோசித்துப் பார்ப்போம்.

## காட்சி 5

(காயர் பிறஞ்சர் வீடு. மாலை நேரம், மூப்பரும் யோணும் உள்ளே வரல்).

யோண் - வணக்கம் ஐயா!

பிறஞ்சர் - (தனக்குள்ளே) அடடா, விசயம் பிழைக்கப்போகுது. ஆரோ விசமிகள் போய்ச் சுவாமிக்குச் சொல்லிவிட்டார்கள். (பெலத்து) வாரும் தம்பி. காரிய மென்ன? இந்த நேரத்திலே. அதோடு மூப்பருமா?

யோண் - நீங்கள் நாளைக்கு வீடுவேய உத்தேசித் திருப்பதாக முனிவர் அறிகிருர். அப்படிச் செய்வது பிழையாம். ஆனபடியால் அந்த வேலையை வேருெரு நாளைக்குப்பின் போடட்டாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறஞ்சர் - அடப்பா, இந்த வடக்கத்தையாருக்கு எங்களுடைய வில்லங்கம் விளங்கிஞலல்லோ. எனக்கு வேறே ஒரு நாளும் வசதியில்லேயே. வேதமென்று சொல்லி எத்தனே வாதைகள். ஆட்களுக்கெல்லாம் சொல்லி ஆயத்தப் படுத்திப் போட்டேன். அதோடு நாளேக்கு மெத்தத் திறமான நாளென்று சங்கரியும் சொன்ஞன். இனி என்னென்று பின் போடுகிறது?

மூப்பர் - வசதிக்காகவோ முகூர்த்தத்துக்காகவோ எங்கள் வேத விதிக்கு எதிராகப் போவது பிழையல்லவா? அதை அனுசரிப்பதற்காக நாமெத்தனே தியாகத்தையும் செய்யத் தயாராயிருக்க வேண்டாமா?.

சாரு - ஓமடா மோனே. இன்ஞசி சொன்னது சரிதான். அற்ப லாபத்துக்காகக் கடவுள் கற்பனேயைப் புறக்கணித்து குருமுனிவு தேவ சாபத்தைக் கட்டிக் கொள்ளப்படாது. ஏன், நீ வேலே செய்கிற இடத்து இறப்பிறமாதுகள் ஞாயிறு நாளிலே துரும்புதானும் தூக்க மாட்டார்களே. அப்படியாஞல் சத்திய வேதக்காரர் என்ன செய்ய வேணும்?

பிறஞ்சர் - (மெல்ல) இதென்ன கரைச்சலடா. இந்தக் கிழவியும் இதுக்குள்ளே வந்து விட்டுது. இனி நான் தவறின பாடில்லே விட்டுக் கொடுக்க வேண்டியதுதான். (பெலத்து) அப்ப, மூப்பர் வேலேகாரரைத் திருப்பியனுப்பத்தான் சொல்லுகிறீர்களா?

மூப்பர் - அப்படித்தான் தம்பி செய்ய வேண்டும். வேய்ச்சலே வேறொரு நாளிலே தான் செய்வது சரி.

பிறஞ்சர் - அப்போ, சீசப்பிள்ளே போய் விட்டு வாருங்களேன்.
இருவரும்- சரி, போய்வருகிறோம்.

## காட்சி 6

(ஞாயிறு, இளநேரம், வேய்ந்த விடு எரிகிறது நூர்க்கிற முயற்சி, பெரிய சத்தம்)

சாரு - (முற்றத்தில்) இந்தக் கெடுவானிடம் சொன்னேனல்லவா, இன்று காலமையும், வீட்டை வேய்ந்து குரு முனிவை வேண்டாதேயென்று. கேட்டாஞ? நல்ல நாளாம். வேறு நேரமில்லேயாம். ''சுவாமி என்ன சூனியமா செய்து போடுவார்'' என்றெல்லாம் பிதற்றிஞனே மடயன். இனி என்ன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்கிறது. இங்கே பாரேன், விதைக்க வைத்த நெல்லுக் கூட எல்லாம் பொரிஞ்சு எரிஞ்சு போச்சே, போடா, பரம சக்தி பிடித்தவனே போய்ச் சுவாமியிடஞ் சொல்லிப் பொறுத்தல் பெற்றுக் கொண்டு வாடா.

பிறஞ்சர் - (தனக்குள்ளே) இது அந்த வடக்கன்ரை விளையாட்டுத்தான். இந்த நெருப்பை வேறொரு விதமாயும் விளக்கமுடியாது: பத்துப்பேர் கூடிப் பச்சையோலையாலே அடித்தும் அடங்காமல் பற்றிப் பரவி விட்டதே. கொஞ்ச நிஞ்சத் தண்ணீரைத் தாஞே அள்ளி இறைத்தார்கள். இது உள்ளபடியே கடவுள் சாபந்தான். சரி, நல்ல பாடம் ஒருகால் கோவிலடிப் பக்கம் போய் வராவிடில் இங்கு இருந்த பாடில்லை.

சாரு - வெளிக்கிட்டு விட்டியா? வா, போவோம் பட்டுக்கரியாது புத்தி புரியாது.

## காட்சி 7

(முனிவர் கோவிற் திண்ணையில் அங்கியணிந்து உட்கார்ந்திருக்கிருர். மூப்பர், சாரு, பிறஞ்சர் உள்ளே வருதல்)

பிறஞ்சர் - (முனிவர் முன்னே முளங்காலிலிருந்து) மன்னித்தருளும் சுவாமி, மோட்டுத்தனம் செய்து போட்டேன். சொல் வழி கேளாமல் பழியைத் தேடிக் கொண்டேன்.

வாஸ் - நாங்கள் தேவ கோபத்துக்கு ஆளாவது பெரிய ஆபத்து. அவர் நல்லவர், இரக்க முள்ளவர். ஆனல் அவர்வைத்த ஒழுங்கை எவரும் மாற்றமுடியாது. உனக்கு ஏற்பட்ட பொருள் நட்டத்திலும் பார்க்கக் கடவுளுக்குச் செய்த அவமானம் பெரிது. ஆகையால் நாமெல்லாரும் சேர்ந்து அவரிடம் பொறுத்தல் கேட்டு இனிமேல் இவ்விதம் செய்யமாட்டோமென்று வாக்குப் பண்ணுவோம். (எல்லாரும் முளந்தாளிட்டுவேண்டல்) [குரு எழுந்து "எல்லாம் வல்ல இறைவன்........." சொல்லி ஆசீர் வதித்தபின்] பாவத்திஞல் நாமே நமக்குத் தண்டனையை வருவித்துக் கொள்ளுகிருேம். அதனையே பணிந்த மனதுடனேற்றுப் பிராயச்சித்தமாக்கவேண்டும்.

சாரு - இன்றைய பாடத்தை எப்போது நினைத்துக் கொள்ள ஏதாவதொரு சின்னம் ஆசீர்வதித்துக் கொடுங்கள் சுவாமி; ஒரு வரோணிக்க மென்ருலும் போதும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வாஸ் - (ஒரு மரச் சிலுவையைக் கொண்டுவந்து) இதோ இந்தச் சிலுவையை ஆசிர்வதித்துத் தருகிறேன். திரும்பக் கட்டும் வீட்டிலே இதை வைத்து இனிமேல் தேவனுடைய திருச் சபையின் கற்பனைகளை மீறப்படாதென்று நினைத்துக் கொள் ளுங்கள் (பிரஞ்சர் கையிலே கொடுக்கிறார்).

பிரஞ்சர் - மெத்தப்பெரிய உபகாரம் சுவாமி இனிமேல் எச்சரிக்கை யாயிருப்பேன்.

வாஸ் - ஆண்டவர் உங்களை ஆசிர்வதிப்பாராக!

மற்றவர்கள் - உம்மையும் ஆசிர்வதிப்பாராக, சென்று வருகிறோம்.

வாஸ் - சென்று வாருங்கள்.





## காட்சி 8

(சில்லாலை கோவில் வீட்டில், முனிவர் புத்தகம் படித்தல். கிழவி ஒருபொட்டலத்துடன் வருதல்)

சாரு - யேசு வாழ்க! சுவாமி.

வாஸ் - மரிவாழ்க! ஆச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாரு - வீட்டு வேலை முடிந்து விட்டது. அதுதான் பின்னேரம் வெய்யில் தாழ அதை ஆசீர்வதிக்கச் சுவாமிக்கு வசதியிருக்குமோ என்று விசாரிக்க வந்தநான்.

வாஸ் - வீடுகட்டி வேய்ந்தாயிற்ரு? மெத்தச் சந்தோஷம். கட்டாயம் இன்று பின்னேரம் வருவேன், ஆயத்தமாக்கலாம்.

சாரு - எங்கள் தோட்டத்து வாழைக்குலையொன்று பழுத்தது. அதிலொரு சீப்பைச் சுவாமிக்குக் கொண்டுவந்தநான். தம்பி யோண், இந்தா மகனே, இதைக் கொண்டுபோய் மேசையில் வை (யோண் வாங்கிப் போதல்).

வாஸ் - நாமிங்கு வந்தும் ஒருவருடமாகிறது. இந்தக் குடா நாட்டின் பல பாகங்களிலும் போய்ச் சிதறித் தவித்த ஆண்டவரின் ஆடுகளை ஒன்று சேர்த்து உணவு ஊட்டி வருகிறேம்.

சாரு - ஆம் சுவாமி, அந்த நாளிலே பண்டத்தரிப்பிலிருந்து சுவாமி கிழமை தவறுது வருவார். சனிக்கிழமை வந்து ஞானேபதேசம், பாவசங்கீர்த்தனம், வீடு சந்திப்பு இதெல்லாம் நடக்கும். ஞாயிற்றுக் கிழமைப் பூசைக்கு ஒரு குருவியும் தவறுது. எங்களூரிலே பொருட்களுக்குக் காவல் வேண்டாம். பொய் களவு என்ற பேரே இங்கு இல்லை. பிரசங்கம் சொல்ல ஆறியிருந்து கேட்போம். வேத விளக்கம் ஒரு மணித்தியால மாகுதல் பிடிக்கும். இந்த ஒல்லாந்தர் வந்ததோடு எல்லாம் போச்சு. செபமாலையும் பூசைத் தியானமும், தத்துவ போதகர் தந்த புத்தகங்களுமல்லோ எங்கள் தாபரம்.

வாஸ் - வேத அறிவில்லாமல் விசுவாச வாழ்க்கையில் நிலைக்க முடியாது. எல்லாம் ஆண்டவன் அருளாலேதான் ஆவது என்பது உண்மை. ஆனல் அது எப்போதும் எம்முன்னிருக்கிறது. எமது சுதந்திரத்தின் மூலம் அதைப் பெற்றுப் பாவித்தாலல்லோ பலன். அறிவும் அப்பியாசமும் அதற்கவசியம்.

சாரு - அந்த நல்லவசதி நமக்குக் கிடைத்தது பாக்கியந்தான். மற்றவர்களுக்கும் அது கிடைக்குமுன் சூருவளி வந்து எல்லா மடித்துக் கொண்டு போட்டுது, இப்ப முப்பது வருடமாகிறது. உலாந்தா ஆட்சியும் பெலத்துக் கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாஸ் - உலாந்தா வந்தபோது நீங்களென்ன செய்தீர்கள்:

சாரு - நாங்களோ? எங்களாண்பிள்ளைகள் உறங்கவில்லை. பண்டத்தரிப்பிலே போய்க் கொலையுண்ட இரு குருமாரின் பிரேதங்களைப் பிடுங்கிவந்து இங்கு, இதிலே, கோவிலுக்குள்ளே அடக்கினார்கள். அங்கு உடைபடாது மிஞ்சிய சுருவங்களை இங்கு கொண்டுவந்தார்கள். கோவிலைச் சுற்றிக் கோட்டை மாதிரிக் குடிசைகளைக் கட்டிக் குடிபுகுந்தனர். கோவிலையும் பிடுங்கி இரட்டைவீடாக அமைத்தார்கள்; இன்று அந்நியர் எவரும் இங்கு புகுதல் பொல்லாத வில்லங்கந்தானே.

வாஸ் - அதன் பின் குருமார் எவரும் இங்கு வரவில்லையா?

சாரு - வடகரையிலிருந்து வருவார்களென்று காத்திருந்தோம். கொம்பனியார் காவல் கடுமையாயிருந்த படியால் வந்திறங்க முடியவில்லை.

வாஸ் - ஆனபடியால் உபதேசியாரே குருவினிடமாக எல்லாம் நிர்வகிக்க வேண்டியதாயிற்று; அப்படித்தானே?

சாரு - ஆமாம் இந்த மூப்பரின் தந்தை தான் தலைமை வகித்து இத்தனை கத்தோலிக்க குடும்பங்களையும் கட்டிக் காத்து வந்தார். இப்போது இஞ்ஞாசியும் அந்தக் கடமையைச் செய்து வருகிறார்.

வாஸ் - ஆச்சி சொல்ல அவரும் வருகிறார்.

இஞ்ஞாசி - யேசு வாழ்க! சுவாமி

வாஸ் - மரிவாழ்க! மூப்பர்.

இஞ்ஞாசி - கிழவியார் வந்தது சுவாமிக்கு நல்ல பைம்பல் போலிருக்கிறது.

வாஸ் - ஆம்; பழங்கதைகள் சொல்லுகிறா, கேட்டுக் களிக்கிறோம். இது அருமையாய்க் கிடைக்கும் விருந்தல்லவா?

இஞ்ஞாசி - உண்மைதான். என்றாலும் போனதிலும் பார்க்க வருவதைக் கவனிப்பது அவசியமாகிறது. அதற்காகத்தான் கதைக்கலாமென்று வந்தேன்.

சாரு - ஓம், இனி நீங்கள் கதையுங்கள். என்னையும் வீட்டிலே தேடுவார்கள். போய்வருகிறேன்.

வாஸ் - போய்வாருங்கள். பின்னேரம் வீட்டிலே சந்திப்போம்.

சாரு - சுவாமிக்குத் தோத்திரம் (வெளியே போகிறா).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி 9

(பண்டத்தரிப்பு, பாதிரியார் வீட்டில்).

நல்லையா - வணக்கம், பாதிரியாரே-

பாதிரியார்- வணக்கம், என்ன சுபசெய்தி? முகம் மெத்தச் செந்தளிப்பாயிருக்குதே.

நல்லையா - ஆம் ஐயா, ஒருவருடகாலமாக எடுத்த பயணம் முடிவுக்கு வருங்காலம் கிட்டிவிட்டது போலிருக்கிறது.

பாதிரியார்- அதென்ன? அந்தச் சில்லாலைப் பாப்பிசர் பற்றியா?

நல்லையா - ஆமாம். ரோமான் வேதக்காரனின் உற்சாகத்துக்குக் காரணமான கத்தோலிக்க குரு சில்லாலையிலேதான் தங்கி நாலா பக்கமும் போய் வருகிறார் என்று தெரிந்ததே: ஆயினும் அதற்கு நடவடிக்கை எடுக்க முடியவில்லை. காரணம், அந்த ஊருக்குள்ளே அந்நியர் எவரும் இரவிலே தங்க முடியாது. இப்போது அதற்கு மருந்து கிடைத்து விட்டது. ஒரு கையாள்.

பாதிரியார்- அதாரது?

நல்லையா - அவன் பெயர் சீமான். அந்த ஊரவன், இங்கு சந்தையிலே தரகு வேலை. அவனை நெடுநாளாகப் பழக்கம் பண்ணித் தண்ணீர் வெந்நீர் வாங்கிக் கொடுத்து இப்போது ஆளை வசப்படுத்தி வலை விரித்திருக்கிறேன். அதாவது, இந்த அலுவலில் உதவி செய்தால் அடுத்த வருடச் சந்தைக் குத்தகை எடுத்துத் தருவேனென்று வசைத்திருக்கிறேன்.

பாதிரியார்- அந்த விற்பனை என் கையிலிருப்பதால் அதிலே பிரச்சினையில்லை.

நல்லையா - அதனுந்தான் ஆளையும் கையோடு அழைத்து வந்திருக்கிறேன் முடிவு செய்வதற்காக.

பாதிரியார்- நல்லது, கூப்பிடும்.

நல்லையா - சீமான், பாதிரியார் வரும்படி அழைக்கிறார், வாரும்!

சீமான் - வணக்கம், ஐயா!

பாதிரியார்- வணக்கம், அப்ப நீ சந்தைக்குத்தகை எடுத்து நடத்தவா விரும்புகிறாய்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீமான் - ஆமையா, அதெல்லாம் உங்கள் கையிலேதானிருக்கிறது என்று சொன்னார் நல்லையா. கேட்டுப் பார்ப்போம் என்று கூட்டிக் கொண்டு வந்தார்.

பாதிரியார் - நான் விரும்பினால் இந்த வருடத் தொகைக்கே எவருக்கும் கொடுக்கலாம். அது இலகு. அதற்கு நீர் செய்ய வேண்டிய உதவியிலேதான் எல்லாம் தங்கியிருக்கிறது.

சீமான் - அது சிறிது சிரமந்தான். என்றாலும் சம்மதமென்றால் செய்ய முடியும்.

பாதிரியார் - எப்போது, எப்படிச் செய்வீர்?

சீமான் - இந்த ஆவணியிலே எங்களுக்கு ஒரு பெருநாள் வருகிறது. அவ்வேளை கட்டாயம் ஒருநாளாவது பலிப்பூசை நடைபெறும். நவநாட் தொடக்கத்தில் நீங்கள் சேவகரை ஆயத்தமாக்க வேண்டும். ஒரு நாளுக்கு முன் நான் வந்து அறிவிப்பேன். அன்று நானிங்கு தங்கிக் குறித்த நேரம் சேனையோடுபோய் ஆளை அப்பவேண்டியது.

பாதிரியார் - நல்ல யோசனை. உனக்கும் வெகுமதிப் பணமும் பறி பொருட்களும் நிறையக் கிடைக்கும். சரி, பட்டணத்திலிருந்து ஆட்களை எடுப்பிக்க வேண்டும். திட்டம் பிழைத்தால் நட்டம் அதிகம், ஆதலால் சாக்கிரதை. நான் அதிகாரிகளுக்கு உனது சம்மதத்தை அறிவிக்க இந்தப் பத்திரத்திலே எழுதிக் கையொப்ப மிட்டுத் தா. (சீமான் எழுதுகிறார்). நல்லையா, நீதான் இதற்குச் சாட்சியும் பொறுப்பும் என்று கீழே கையொப்பம் போடு.

நல்லையா - நானிருக்கும் போது வேறுசாட்சிகளேன்? ஒன்றும் பிழைக்காது. (ஒப்பமிடுகிறார்).

பாதிரியார் சரி, இது ஒரு சிறு சந்தோஷம் (பணம் கொடுக்கிறார்) போய்வாருங்கள்.

இருவரும் - பெரிய உபகாரமையா, போய் வருகிறோம்

## காட்சி 10

(சில்லாலைக் கோவிலில் பலிப் பூசைக்கு ஆயத்தம். கோவில் திண்ணையிலும் முற்றத்திலும் செபமாலை சொல்லுகிறார்கள். மூப்பர் வீட்டு முற்றத்திலே பாவசங்கீர்த்தனம்



பொது நூலகம்
6301
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெறுகிறது. காவலாட்கள் இடைக்கிடை மூப்பரிடம் ஏதோ சொல்லிவிட்டுப் போகின்றனர்.

யோசவ் வாஸ்- (பிரசங்கம்) அன்பான சகோதரரே: தேவதாய் அழியாத உடலோடு மோட்ச மகிமையிற் பிரவேசித்த சம்பவத்தைத் திருச்சபை இன்று கொண்டாடுகிறது. நாங்களோ ஆதித்திருச் சபையில் அப்போஸ்தலரும் சீடரும் யூதருக்குப் பயந்து பரிசுத்த ஆவியின் வருகைக்காக மாதாவோடு மன்றாடிக் கொண்டிருந்தது போல இங்கு கூடியிருக்கிறோம். எங்களுக்கு வெளி ஆடம்பரமொன்றுமில்லை. ஆனால் யேசுவும் மரியும் மற்றும் புனிதரும் எங்களோடிருப்பதை உணருகிறோம்.

உலக அதிகாரிகள் எமது உடலை வதைக்கலாம், கொல்லலாம். எமது ஆன்மா ஆண்டவன் அடைக்கலத்தில் இருக்கிறது எம்மைத் தவிர வேறெவரும் அதைக் கெடுக்க முடியாது. யேசுவுடன் மரிப்போமானால் அவருடனுயிர்ப்போ மென்று அறிவோம். மரியாய் அந்த மகிமையைப் பெற்றுவிட்டார். நாமும் அதை ஒருநாள் அடைவோமென நம்புகிறோம். அதற்கு ஆயத்தப் படுத்துவதே எமது இவ்வுலக சீவியத்தின் நோக்கம்.

எவ்வாறு என்று கேட்பீர்களா? யேசுக்கிறிஸ்து நாதர் காட்டிய மாதிரி நமது நாளாந்த அலுவல்களைக் கடவுளுக்குப் பிரியப்படும்படி செய்வதனாலென்க. நன்மையானதை அறிந்து விரும்பிச் செய்வோம். அயலாருக்கும் அந்நியருக்கும் இயன்ற உதவி புரிந்து நாமெல்லாரும் பரலோக பிதாவின் பிள்ளைகள் என்று காட்டுவோம். இதிலெங்களுக்கு வழிகாட்டவும் உதவி செய்யவுமே சத்திய திருச்சபையைத் தேவன் தந்திருக்கிறார்.

உலகிலே நாங்கள் உத்தரிக்கிறோமானாலும் உந்நதத்திலே உயிர்வாழ்வோ மென்ற நம்பிக்கை நமக்கு மகிழ்ச்சி தருவதாகும். மரியாய் சிலுவையடியில் நிமிர்ந்து நின்று யேசுவின் பலியிலே பங்குபற்றியது போல நாமும் பலிப் பூசையிலே பங்கு பற்றி வெற்றி பெறுவோமாக.

(பலிப்பூசை தொடங்கித் தொடர்கிறது.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி 11

(பண்டத்தரிப்புச் சந்தையடியில், தெருவில் இருவர் கதை)

அலேசு - எங்களூர்ச் சீமான் அங்குமிங்கும் பார்த்துவிட்டுப் பாதிரி கோவில் வளவுக்குள்ளே போகிறதை மூடக்கிலே மறைந்து நின்று பார்த்தேன். இந்த நாளிலே, இந்த நேரத்தில், இவன் இங்கே என்ன செய்கிறான் தெரியவில்லையே.

மனுவல் - அந்த வளவுக்குள்ளே வேறு பலரும் போவதைக் கண்டேன். மூன்று நாட்களுக்கு முன்னே ஒரு கூட்டம் பட்டாளகாரர் இங்கே வந்து சேர்ந்தனர் என்று விசளமும் கிடைத்தது. உள்ளே ஏதோ உருவாகிக் கொண்டிருக்கிறது. கவனமாகப் பார்த்து நேரத்தோடு எச்சரிகை கொடுப்பதுதான் நமது கடமை. (ஒருவர் கிழக்கும் மறவர் மேற்குமாக நடக்கின்றனர். சிறிது நேரத்தால் திரும்பி வருகின்றனர்).

அலேசு - நீ சொன்னது சரிதான். குரவரைப் பிடிக்கப் போகத்தான் பட்டாளம் தயாராகிறது. பாதிரிமடத்து வேலைகாரனொருத்தன் கடையடியிலே கதைத்ததிலிருந்து அது நிட்சயம்.

மனுவல் - அப்படியானால் நானோட்டமாய்ப்போய் அறிவிக்கிறேன். நீயும் ஒரு கால் மணித்தியாலம் கவனித்து விட்டுப் புள்ளுப் போலப் பறந்து வரவேணும். கவனம்.

## காட்சி 12

(கோவிலின் பின் வாசலில் மூப்பரருகில் மூச்சுத்திணற ஓடிவந்து)

மனுவல் - ஆபத்து, ஆபத்து. எல்லாரும் போகவேணும். ஆட்கள் வருகிறார்கள்.

மூப்பர் - (பீடத்தடிக்கு ஓடிப்போய்) சந்துராதிகள் வெளிக்கிடுகிறார்களாம். உடனே சுவாமியின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்டு வீட்டுக்கு ஓடுங்கள். அவசரம் வேண்டாம். இரு பக்கத்தாலும் வெளியேறுங்கள்.

(குரவர் ஆசீர்வதிக்கிறார். எல்லாரும் எழும்பி வெளியே போகிறார்கள். சிலர் சாமான்களை நீக்குகின்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளர் மாடுகளைக் கொண்டு வந்துகட்டி வைக்கோல் உதறு கின்றனர்.)

அலேக - (ஓடிவந்து) கூட்டம் வெளிக்கிட்டுவிட்டது. இன்னும் கால் மணித்தியாலத்தில் இங்குநிற்பார்கள். ஓடிப்போய்ப் படுக்க வேணும். (குரவரும் வேறிடம் போகிறார் திண்ணையிலே ஒரு கிழவி மட்டும் படுத்திருக்கிறு).

காட்சி 13

(படைவந்து மூப்பர் வீட்டையும் கோவிலையும் வளைக்கிறது சிலர் முன் வாசலில் வந்து)

சேவன் 1 - இன்ஞசி, பொலிசதிகாரிகள் வந்திருக்கிறார்கள். படலை யைத் திற.

இன்ஞசி - வருகிறேன் ஐயா, (படலைத் திறந்து) என்ன காரியம் இந்த நேரத்தில்? ஏதோ களவோ கொலையோ நடந்து விட்டதா? நானுங்களுக்கு என்ன உதவி செய்யலாம்?

சேவகன் 2- இங்கு பாப்பிகுக்குரு இருக்கிறுனும், கைதுசெய்ய வந்தி ருக்கிறோம்.

மூப்பர் - எனது வீட்டிலா? குருவா? வந்து பாருங்களேன். (பலர் சீமானுக்குப் பின் உள்ளே ஓடுகிறார்கள். இருட்டு, கிழவி யருகில் மட்டும் சிறு விளக்கு வெச்சம் கொண்டுவந்து தேடுகிறார்கள்).

சீமான் - (மெல்ல) மாதாவே, எனக்கு உதவி செய்யும், ஒரு மெழு குதிரிக் கடையாகுதல் காட்டித்தாரும். நானுமக்குச் சரு கைச் சீலையில் ஒரு பெரிய மாந்து தைப்பிச்சுப் போடு வேன். ஐயோ அம்பிட்டுக் கொண்டேனே. அம்மா, தாயே என்னைக் காப்பாற்றும்.

கிழவி - என்னடா பிள்ளையள் தேடுறியோ? பசுக்கன்று விட்டை வேறுமென்றால் அது வடக்கு மூலையிலே கட்டி நிற்குது. திண்டினது என்ன? கொடுக்கனே, நட்டுவக்காலியோ?

சேவன் 3 - இங்கே பாப்பிசுமில்லைப் பேய் பிசாசுமில்லை! டேய் சீமான் எங்கேடா உன்ரை சாமி? உடனே காட்டிக் கொடடா, இல்லாவிடில் முதுகு கவனம்.

சீமான் - (நடுங்கிக் கொண்டு) மூப்பரின் வீட்டுக்குள்ளே இருப்பார் பாருங்களையா.

மூப்பர் - சரி பார்க்கலாம் (அறையைத் திறந்துவிடல்).

சேவகன் 2- இங்குமில்லை. எனக்கு நல்ல காலம். எலிப்பொறியில் அகப் படப்பட்டேன். தட்டுண்டு பொறிந்ததைத் தவறிவிட்டேன்

சேவகன் 1- சீமான் எங்கே. அவனைக் கவனமாகக் கொண்டு வாருங்கள் நாங்கள் போவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி 14

(பண்டத்தரிப்பில் பாதிரி வீடு. பாதிரியாரும் வேறு சிலரும் உட்கார்ந்திருக்கின்றனர்).

**வேலையாள்-** (வாசலில்) போன ஆட்கள் திரும்பி வருகிறார்கள். ஓடிப் போய் ஐயாவுக்கு அறிவிப்போம். (ஓடிவந்து) ஐயா, போன கூட்டம் வந்து விட்டது.

**பாதிரியார்-** மெத்த நல்லது. நேரே கைதிகளை உள்ளே கொண்டு வரச் சொல்லு. (சீமானை உள்ளே தள்ளக் கோபத்தோடு) இதென்ன? பகிடியா, பரிகாசமா? என்ன நடந்தது, தாமதியாமற் சொல்லுங்கள்

**சேவகன் 1-** ஐயா நாங்களோடிப் போய்க் களைத்ததுதான் மிச்சம். அங்கு கூட்டமோ குருவோ ஆளோ அடையாளமோ யாதொன்றுமில்லை.

**பாதிரியார்-** சீமான், என்ன சொல்லுகிறீர்கள்? (இருவரும் மௌனமாக ஒருவரை யொருவர் பார்த்து முளுசுதல்) உடனே வாய் திறந்து விடை கொடுங்கள். அல்லாவிடில் கடுமையான தண்டனை கிடைக்கப் போகிறது.

**உதவியாள்-** வேறெவராவது இதற்கு விளக்கம் கொடுக்க முடியுமா? (மௌனம்)

**பாதிரியார்** சரி, இவன்களிருவரையும் நேரே மைதானத்துக்குக் கொண்டுபோய் அங்கே கள்ளிமரத்திலே கட்டிக் கசையடிபோடுங்கள். அது அவர்கள் சாகுமட்டும் நினைவாலே நீங்காமல் இருக்க வேண்டும். இழுத்துக் கொண்டு போங்கள். (4 சேவகர் இருவரையும் கொண்டுபோதல்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கம் V

## நத்தார் வேட்டை

### காட்சி 1

(யாழ்ப்பாணக் கோட்டை. வான்றீட் பாதிரியாருடன் கதைத்துக் கொண்டிருத்தல்)

சேவகன் - ஐயா, பாபாப் பட்டம் தளபதி வந்திருக்கிறார்.

வான்றீட்- உடனே உள்ளே வரச்சொல்லு.

பட்டன் - நமஸ்காரம் ஐயா!

வான்றீ - நமஸ்காரம் தளபதி! உம்மைத்தானே பார்க்கப் பாதிரியார் வந்திருக்கிறார். உட்காரும்,

பட்டம் - வரத் தாமதமானதற்கு வருந்துகிறேன். தங்கள் தேவையைத் தெரிவிக்க முடியுமா? இயன்ற யாவும் செய்யத் தயாராயிருக்கிறேன்.

பாதிரியார்- சிலகாலமாக எமது கோயில்களிலே ஞாயிறு வழிபாட்டுக்கும் போதனை வகுப்புகளுக்கும் சமூகமளிப்பவர் தொகை வர வரக் குறைந்து கொண்டு போகிறது. கடுமையான தண்டம் விதித்த போதிலும் திருந்துவதாகக் காணவில்லை.

வான்றீட் - அதற்குப் போதிய காரணம் ஆரோ ஒரு பாப்பிசுக்குரு இங்கு உலாவிவருவதுதான். அடித்த பாம்பு போல அடங்கிக் கிடந்த கத்தோலிக்கர் மீண்டும் துணிவு காட்டுகிறார்கள். தண்டங் கட்ட வேண்டிய போதிலும் றோமிய குருட்டாட்டங்களில் ஈடுபடுகின்றனர். இதைத் தொடரவிடப்படாது.

பட்டம்:- அப்படியானால் உளவு காரரை நாலாபக்கமும் அனுப்பி ஆளை அப்பிவரச் சொல்லுகிறீர்களா?

வான்றீட் - சரியாய்ச் சொன்னீர். செலவையோ சிரமத்தையோ கவனிக்க முடியாது. கூடிய சீக்கிரத்திலே கருமம் முடிய வேண்டும்.

பாதிரியார் - கனதரம் அந்தக் கள்ளத் தோணியைக் கைப்பற்றப் பார்த்தோம். ஏதோ மாயமாய் மறைந்து விடுகிறான். ஆள் உலாவுவது இரவிலே தானும். எனினும் குடாநாடு முழுவதிலும் ஓர் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. எங்கள் அறிக்கைகளிலிருந்து அது துலாம்பரம்.

வான்றீட் - சென்ற ஆண்டு நத்தால் பண்டிகையின் போது இந்த எமது பட்டணத்திலேயும் பலிப்பூசை நடந்ததாகப் பின்னர் அறியலானோம். இந்த விக்கிரக ஆராதனை பரவாதபடி தடுப்பது எமது கடமையல்லவா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பாதிரியார்** - கட்டாயம். இவ்வருடமும் நத்தால் நாளிலே அதே சம்பவம் நடக்கும். நாமதற்குத் தயார் செய்ய இன்னும் மூன்று மாதங்களிருக்கின்றன. வேவு பார்க்க ஆட்களை அதிகரிக்க வேண்டும். தகவல் தருவோருக்கு வெகுமதி அதிகம் விளம்பரம் செய்ய வேணும். எப்படியாயினும் இவ்வருடம் முடியு முன் அத்துரோகியைத் தொலைத்துவிட வேண்டும்.

**பட்டன்** - தேவரீருக்கு விருப்பமானல் மலையைப் பிரட்டி மடுவை நிரப்பத் தானும் தயார்.

**வான்றீட்** - (கடிதம் ஒன்றைக் கொடுத்து) இதோ எனது கட்டளை. வேண்டிய பணத்தைப் பெற்றுக் கொள்ளவும். நேரகாலத் தோடு ஆட்களை அனுப்பி ஆவன செய்து உமது கெட்டித் தனத்தைக் காட்டிவிடும்.

**பட்டம்** - அப்படியே செய்கிறேனையா. வணக்கம். சென்று வருகிறேன்:

**இருவரும்** - வணக்கம். சென்றுவாரும்.

## காட்சி 2

(விளான் தவறணையடியில்)

**சுந்தரம்** - (தனக்குள்ளே) கதிரை மலையானே, கருணை புரி ஐயா, புதையல் கிளம்புமென்று இந்தப் புது வேலையிலிறங்கினேன். உளவறிய வழிதேடி எத்தனை நாளாயலைகிறேன். நத்தாருக்கு இன்னும் ஒரு கிழமை தானிருக்கிறது. இன்னும் பூசைபற்றி ஒரு தகவலும் கிட்டவில்லையாம். செய்தியை முதலறிவிக்கிறவருக்கு முன் சொன்னதிலும் இன்னும் 100 வராகன் அதிக வெகுமதியாம். ஒரு பிள்ளை சீதனம். இது கிடைத்தால் நான் கட்டாயம் கதிர்காமம் யாத்திரை வருவேன். (நடத்தல்) அதோ தவறணை. அங்கே ஆரேனும் வேதக்காரர் நின்ருல் தட்டிப் பார்ப்போம். (உள்ளே போகிருர்). அந்த மூலையிலே சில்லாலை மிக்கேல் நிற்குமாப் போலிருக்கு. வலைவிரித்துப் பார்ப்போம். (கிட்டப் போய்) மச்சான், மிக்கேல், என்ன கன நாளாய் இந்தப் பக்கம் காணவில்லை?

**மிக்கேல்** - தோட்டவேலை கஸ்டம். ஓலை தாழ்ப்புக் காலம் தெரியாதா, அங்கிங்கு போக முடியுமா?

**சுந்தரம்** - நானும் வயலிலே நின்றுதான் வாறேன். தாகமாயிருந்தது ஒன்று இரண்டு பார்ப்போமென்று வந்தேன். நீ முடித்துப் போட்டியா? இரு நானும் வாங்கிக் கொண்டு வாறேன். (கள்ளும் பொரியலும் கொண்டு வரல்) இங்கே பார்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொரித்த இறால், கடித்துக் கொண்டு குடிக்க இதமாயிருக்கும். சுவைத்துப் பாரேன்.

மிக்கேல் - ருசியாய்த் தானிருக்கு.

சுந்தரம் - அதென்ன நாக்கு நனைக்கவும் காணுதே. எனக்கு மூன்று என்றாற்தான் தாகந்தணியும். இன்னும் ஒரு அரை ஒன்றும் செய்யாது. இந்த வாங்கில இறாலையும் முடிக்க வேணுமே (ஒருசுண்டு வார்த்து வரல்) ஒரு கொஞ்சந்தான். என்னோடு பைம்பலாய்க் குடி.

மிக்கேல் - நான் கொஞ்சம் தூரம் போகவேணும். மிஞ்சினால் பஞ்சியாயிருக்கும்.

சுந்தரம் - எவ்விடம் பயணம். ஏதேனும் அவசர அலுவலா?

மிக்கேல் - உதிலே வசாவிளான் மட்டும். அதிலே ஒரு ஆளைக்காண வேணும்.

சுந்தரம் - அப்படியென்றால் எனக்கும் தெல்லிப்பளையில் ஒரு அலுவலிருக்கு. கொஞ்சம் பொறுத்து இருவரும் ஒருமிக்கப் போனாலென்ன? அங்கே மாமியவை ஒரு வாழைக் குலைக்குச் சொல்லிவைத்தவை. அதையும் கொண்டு போய்க் கொடுத்து விட்டு வந்து விடலாம். வா, வீட்டிலேபோய் ஏதும் சாப்பிட்டுவிட்டுப் புறப்படலாம்.

## காட்சி 3

(இருவரும் தெருவில் நடை. சுந்தரம் வாழைக்குலையோடு)

மிக்கேல் - மாமி வீட்டிலே என்ன கலியாணமா?

சுந்தரம் - இல்லை. நத்தார் வருகிறது தெரியாதா? அவர்கள் வேதக்காரர். அதுதான் கொண்டாட்டத்துக்குத் தேவையென்று ஒன்று கொண்டுவரச் சொன்னார்கள்.

மிக்கேல் - என்ன வேதம். அவர்கள் இறப்பிறமாதா?

சுந்தரம் - வெளிக்கு அதுதான். ஆனால் அனுசரிக்கிறது கத்தோலிக்க வேதமாம். முந்திப் பாதிரி கோவிலுக்குப் போய் வந்தவர்கள். இப்போது போறது குறைவு. சில நாட்களின் முன் எங்கேயோ பூசைக்குப் போய் வந்ததென்று சொன்னார்கள்.

மிக்கேல் - தெல்லிப்பளையிலே இன்னும் ஒருக்காலும் பூசை நடக்கவில்லையா?

சுந்தரம் - அதெப்படி எனக்குத் தெரியும். அது அவர்களின் இரகசியம். எந்தக் கோடியில் நடந்தாலும் இரவிரவாய்ப் போய்விட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாறதுதானே வழப்பமாம். இந்த முறையும் நத்தாருக்கு எங்காவது போவார்கள். சென்ற ஆண்டு கரையூருக்குப் போனார்களென்று கேள்வி.

மிக்கேல் - (தனக்குள்ளே) அப்படியானால் அவர்கள் ரோமான் கத்தோலிக்கர். பலிப்பூசையிலே மிகுந்த சரிசனையுடையவர்கள். இவர் மூலம் இடங்களைச் சொல்லியறிவித்தாலென்ன? அவர்களும் பலனடையட்டுமே.

சுந்தரம் - என்ன யோசிக்கிறீர். அவர்களாரையேன் கண்டு கதைக்க வேண்டுமானால் அல்லது ஏதும் அறிவுக்க வேண்டுமானால் நானே சொல்லிவிடுகிறேன்.

மிக்கேல் - (தனக்குள்ளே) அது சுகத்தான், நானும் இரவுக்கு முன் விடுபோய்ச் சேர வேண்டும். சரி.

சுந்தரம் - இந்த நத்தாருக்கும் எங்கேயாவது பூசையிருக்குமா?

மிக்கேல் - அது இரகசியம், வேறொருவருக்கும் சொல்லிப் போடாதே. மாமிவீட்டாருக்கு மட்டுந்தான் சொல்ல வேண்டும்.

சுந்தரம் - நானேன் கண்டவைக்கும் சொல்லுகிறேன். ஏன் எனக்கென்ன விசரா பயித்தியமா? எங்கே யெங்கே பூசையிருக்குமென்றுதானே சொல்ல வேணும். வேறொரு குருவிதானும் அறிய மாட்டாது.

மிக்கேல் - இந்த நத்தாருக்கு மூன்று இடங்கள் தெரிந்திருக்கு. ஒன்று தோலகட்டி மற்றது மானிப்பாய் மூன்றாவது கரையூர். கவனம் நம்பிக்கைத் துரோகம் செய்து போடாதே: வேறொருவருக்கும் சொல்லிவிடாதே

சுந்தரம் - பயப்படாதே. அப்படியொன்றும் நடக்காது. (சிறிதுதூரம் போனபின்) மாமிவீட்டை போக இதாலே ஒரு குறுக்கு வழியிருக்கிறது, நானிதாலே திரும்புகிறேன். நீ சேமமாய்ப் போய்விட்டு வாவேன்.

மிக்கேல் - சரி போய் வா. கவனம், இரகசியம்.

சுந்தரம் - (தனக்குள்ளே) ஆர் கெட்டிக்காரன்! மதுவாலே மதியை வென்றவனல்லவா? கடவுளாலாகாதது கள்ளினாலாகும், சருவேசுரனாலாகாதது சாராயத்தினாலாகும் என்று எவனோ சொன்னதும் பொய்யா? (பாடிக் கொண்டு நடக்கிறார்).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி 4

*(நல்லூரில், பாதிரியார் இல்லம், வான்றீட், பாதிரியார், பாபாப் பட்டம்)*

பட்டம் - எனக்குக் கிடைத்த தகவற்படி மூன்று ஊர்களில் அந்தக் குரு நத்தார்ப் பூசை வைக்க ஒழுங்காம். தோலகட்டி ஒன்று மானிப்பாய் இரண்டு கரையூர் மூன்று.

பாதிரியார் - எந்த மூலையில் எவர் வீட்டிலே என்பது பற்றி அசுகை யொன்றுமில்லையா?

பட்டன் - இல்லை. அது கடைசி நாளிலேதான் கிடைக்கும் போலி ருக்கிறது.

வான்றீட் - இவ்வளவு செய்தியும் கிடைத்தது பெரிய உதவி. வேவு காரரெல்லாரையும் இந்த மூன்று வட்டாரங்களுக்கு மெடுத்துப் போடுவோம். பட்டாளத்தையும் அவ்விடங் களின் அருகாமைக்கு விமரிசையாக அனுப்ப வேணும். 24-ந் தேதி மாலையாகுதல் இடந் தெரிந்து விடும். சாமத் துக்கு முன் பின்னாக வலையிலிறங்கி எலியைப் பிடித்துப் போடலாம்.

பட்டம் - ஆமையா, புலன் விசாரணையை இன்னும் தீவிரமாக்குவது தான் வழி.

பாதிரியார் - இந்த முறை எங்கள் திட்டம் கட்டாயம் சித்திதான். பாப்பிசுப்பிள்ளை தப்பவே முடியாது. என்றும் மறவாத பாடம் படிப்பித்துவிடவேண்டும்.

வான்றீட் - சரி, பட்டாளம் போகிறபடியால் அந்தக் குருவை மட்டு மல்ல அங்கு கூடியிருக்கிற எல்லாரையுமே கொண்டுவரச் சொல்லி விடுவோம். அப்போது அவன் வேடம் மாறினு லும் ஓடித் தவற முடியாது.

பாதிரியார் - நல்ல உபாயந்தான். எல்லாருக்கும் கடின தண்டனை கொடுத்தால் இனிமேல் அவர்கள் கொம்பனியாரின் கட் டளைகளை இலேசிலே தட்டிக் கழிக்கத் துணிய மாட்டார் கள்.

பட்டன் - எல்லாரையும் கட்டி இழுப்பதானல் அதிக ஆட்கள் தேவைப்படுமே.

வான்றீட் - பரவாயில்லை. செய்கிற வேலையிலே மிச்சம் சொச்சம் விடப்படாது. துப்புரவான தொழில் தேவை. செலவு சிர மம் எதுவானலும் பரவாயில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டம் - அப்படியாயின் நான் சென்று அவற்றைக் கவனிக்கிறேன். வணக்கம்.

இருவரும் - வணக்கம், சென்றுவாரும்.

பாதிரியார் - மூன்று இடங்களிலும் கூடுகிற ஆட்களெல்லாரையும் கொண்டுவந்து எங்கு அடைப்பது, எங்கு விளங்குவது என்று இப்பவே ஒழுங்கு செய்வது நல்லதல்லவா?

வான்றீட் - அது சுலபம். கோட்டைக்குள்ளே நமது வீட்டுக்கருகே பல கிட்டங்கிகள் வெளியாயிருக்கின்றன. அந்த மிருகங்களை அவற்றினுள்ளே தள்ளிவிட வேண்டியதுதான். தண்டனை கொடுக்கப் பழைய பிளக்காட்டுகளைப் பாவிக்க வேண்டியது. பறிமுதல், கடுந்த ஊழியம், கசையடி, கழுவேற்றல் எல்லாம் அங்கு எழுத்திலிருக்கிறதே.

பாதிரியார் - எமது நத்தால் கொண்டாட்டம் இவ்வருடம் புது முறையில் நடக்கட்டும், எல்லாம் யெகோவாவின் மகிமைக்குத் தானே. 24-ந் தேதியிரவு கோட்டையிற் சந்திப்போம். (எழும்பி இருவரும் வெளியேறல்)

## காட்சி 5

(யாழ்ப்பாணம் பண்ணைத்துறையில் இருவர் மீன் வீசுகிறார்கள். வேறொருவர் கரையில் உலாவுகிறார்).

சுப்பையா - என்ன சந்தியா, இன்று வேலைக்கு வெளிக்கிட்டு விட்டாய்? இந்த நேரம் உனக்கு எங்கே கள்ளுக் கிடைக்கப்போகிறது?

சந்தியா - இன்றைக்கு வேறொரு அலுவல் இருக்கு. கள்ளுக்குப் போக அவகாசமில்லை. நீ தனியத்தான் போக வேண்டும்.

சுப்பையா - அப்படியென்ன நான்றியாத வேலை உனக்கிருக்கிறது? ஆருக்கோ வீட்டிலை நோய் நொடியா?

சந்தியா - ஆண்டவன் தயவால் அப்படி ஒன்றுமில்லை. இன்று எங்களுக்கொரு பெருநாளிருக்கிறது. அதுக்குப் போக வேணும்.

சுப்பையா - அதென்ன பெருநாள்? ஓ, மறந்தல்லவா பேனேன். வேதக் காரருக்கு நத்தார். ஆனால் நீங்கள் இப்ப கொண்டாட்டம் வைக்கிறதில்லையே.

சந்தியா - பெலத்துப் பேசக் கூடாது. யாரோ கரையிலே நிற்கிறார்கள். அவர்கள் கேட்கப்படாது. கொஞ்சம் கிட்டவாவேன்.

சுப்பையா - அவனாரோ மலிவாக மீன் வாங்க வந்து காத்து நிற்கிறான் போலும், கள்ளுக்குக் காசில்லாதவர்கள். அள்ளிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுப்பார்களல்லவா? அவனை விட்டுப் போட்டு நீ கதையைச் சொல்லு உங்களுக்கும் இன்றைக்குப் பூசை பிரார்த்தனை யுண்டா?

சந்தியா - அதற்குத்தான் நான் நேரத்தோடு கொண்டுபோய் மீனை விற்றுப் போட்டு வீட்டுக்குப் போக வேண்டும். நீ ஆசறுதியாக நின்று நிறையப் பிடித்துக் கொண்டு வாவேன்.

சுப்பையா - அப்படியென்றால் நீ போகத்தான் வேண்டும். சரி, போட்டுவா.

எட்வேட் - (தனக்குள்ளே) ஓகோ! இந்தப் பிள்ளையாண்டான் பாப்பிசுகளிலொருவன். இன்றிரவு பூசைக்குப் போக ஆயத்தமாகிறான். இவனைப் பின் தொடர்ந்தால் காரியம் சித்தியாகும். யாரோ எவருடனே பேசும் போது இடம் எங்கு என்பது கட்டாயம் வெளிவரும். சரி, பின்னாலே சந்தை மட்டும், ஏன் வீடுமட்டும் தானும் போவோம்.

## காட்சி 6

(சின்னக் கடைச் சந்தையடியில்)

சந்தியா - (தனக்குள்ளே) நேரமும் அஞ்சு மணியாகப் போகுது. வீட்டைபோகப் பொழுதுபட்டுப் போம். வயிறும் காய்ந்து தொண்டையும் வரண்டு போயிற்று. இன்றிரவு கொம்பிசம் கொடுக்கச் சுவாமிக்கு நேரமிரா தென்றார்கள். அப்படியென்றால் ஒரு திரும் போட்டுக் கொண்டு போனால் நட்டமில்லை. இன்றைக்குப் பிழைப்பும் பறுவாயில்லைத் தானே.

## காட்சி 7

(சாராயத் தவறணைக்கு நடக்க எட்வேட் பின்னாலே).

எட்வேட் - (தவறணையில்) என்ன அண்ணை, ஆரைத் தேடுகிறீயோ? 1·35க்கு ஆள் பார்க்கிறீரோ!

சந்தியா - ஒன்று முப்பத்தைந்துக்குக் கிடைத்தால் சுகந்தான்.

எட்வேட் - அதோ காந்தி நிற்கிறான் நம்ம கூட்டாளி. உடனே அரையில் இறங்க வேண்டியதுதானே. (அரை போத்தல் வாங்கி மூவரும் வார்த்துக் குடித்தல்).

காந்தி - காணுமோ அல்லது இன்னும் ஒன்று வேணுமோ?

சந்தியா - போதும். எனக்கு நிற்க நேரமில்லை. அலுவலிருக்கு, உடனே போக வேணும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காந்தி - அப்படி என்ன அவசரம்?

எட்வேட் - இன்றைக்குப் பூசை இருக்கிறது தெரியாதா? வீட்டிலே எங்கடை ஆள் சொன்னுவே. நானும் போக வேணும். சரி, போய் வாருங்கள்.

காட்சி 8

(தெருவில் சந்தியாவும் எட்வேட்டும் நடத்தல்)

எட்வேட் - எத்தனை மணிக்குச் சுவாமி வருவார் என்று தெரியுமா?

சந்தியா - அதுதானே தெரியாது. எப்படியும் நாங்கள் ஒன்பது மணிக்கு அங்கு போக வேண்டும். பூசை பத்து மணிக்கோ மூன்று மணிக்கோ சொல்ல முடியாது.

எட்வேட் - போன வருடம் போலச் சின்னப்புச் சம்மாட்டி வீட்டிலே தானோ அல்லது வேறிடத்திலோ கூட்டம்.

சந்தியா - இந்தமுறை அந்தோனிச் சட்டம்பியார் வீட்டிலே. அவருடையது நல்ல விட்டு விசாடியான வீடு. அநேக ஆட்களுக்கு அங்கு இடமுண்டு.

எட்வேட் - இந்தமுறை ஆட்கள் அதிகம் வருவார்கள் தான். (சிறிது தூரம் கூட நடந்தபின்) நான் இதாலே திரும்புகிறேன். பிறகு சந்திப்போம்.

சந்தியா - சரி. போய் வாரும்.

காட்சி 9

(வசாவிளான் சந்தியடியில் ஒரு மரத்தின் கீழ் 4 பேர்).

யோச் - ஏழுமணியாச்சு. இன்னும் ஒரு அசுகையையும் காண வில்லையே.

முத்து - ஏன் அவசரப்படுகிறுய். நல்லாய் இருண்ட பிறகுதான் இந்த வெளவால்கள் கிளம்பும். 10 மணிக்குத்தானே அரைமைல் தூரத்திலே பட்டாளம் வரும். அதற்குமுன் நாம் ஆரையோ பின்சென்று போய் இடத்தைப் பார்த்து விடலாம். பயப்படாதே.

ராமு - சரி பிரிந்து போய் விட்டு இன்னும் ஒரு மணித்தியாலத் தாலே இதிலே வரவேணும். திரும்பவும் கலந்தாலோசிக்கலாம்.

சாள்ஸ் - ஓம் நாலு தெருவிலும் நடப்போம். சரியாக 8 மணிக்கு இதிலே திரும்பவும் சந்திப்போம். (பிரிந்து போகிறார்கள்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி 10

(பலாலிறோட்டில் இரு பெண்கள் அடக்கமான உடையில் நடந்து வருகின்றனர்.)

ராமு - (பின்னாலே வந்து) ஆச்சியவை, இந்த நேரத்திலே தொலைக்கா பயணம்?

ஒரு பெண் - உதிலே கிட்டத்தான். தோலகட்டியில் ஒரு ஆளுக்கு வருத்தம் பார்க்கப் போகிறோம்.

ராமு - நானும் தோலகட்டிதான். அங்கே ஆர்விட்டிலே அப்படி வருத்தம்?

மறுபெண் - அது எங்களுக்குப் பழக்கமான ஆட்கள் வீடு, அவரின் பேர்வழி இப்போது வருகுதில்லை.

ராமு - அப்ப, நல்லது. நீங்கள் மெல்ல மெல்ல வாருங்கள் நான் அவசரம் முன்னுக்குப் போகிறேன். (சந்தியடியிலே கூட்டாளிகளோடு) பின்னாலே இரண்டு பெண் பிள்ளைகள் வருகிறார்கள். வருத்தம் பார்க்கப் போகிறோமென்றார்கள். ஆனால் அவர்களின் சாடையைப் பார்த்தால் பூசைக்குத் தான் என்று தெரிகிறது. நாமிருவர் இவர்கள் பின்னாலே போனால் கூட்டம் நடக்கும் வீட்டைக் கட்டாயம் கண்டு விடலாம்.

சாள்ஸ் - நீதான் கெட்டிக் காரன் ராமு. நீயும் யோச்சும் அவர்களைப் பின் தொடருங்கள். அதோ அவர்கள் வந்து மூடக்காலே திரும்புகிறார்கள். கெதியாகப் போங்கள்.

ராமு - நீங்களும் வருகிற வேறு ஆட்களைக் கவனித்துக் கதை கொடுத்து ஏதும் பிடுங்கப் பாருங்கள்.

## காட்சி 11

(கோட்டையில். 24 மார்கழி இரவு 9 மணி. வான் றீட் அறையிலிருக்கிறார்)

சேவகன் - துரையே, தளபதி பட்டம் வந்திருக்கிறார்.

வான்றீட் - உள்ளே அனுப்பு.

பட்டம் - வணக்கமையா!

வான்றீட் - வணக்கம், உட்காரும்.

பட்டம் - நமது வேட்டை வேலையின் கடைசி ஒழுங்கெல்லாம் செய்தாயிற்று. மூன்றிடத்திலும் பொறியேற்றி விட்டோம்.

வான்றீட் - இந்தமுறை, எமது களஞ்சியத்தைக் கொறிக்கும் எலி தவறி ஓட முடியாது.

பட்டம் - அது கட்டாயம் அகப்படவேண்டும். வேவுகாரரையும் சைனியங்களையும் உளவுகளின் அறிக்கையின் படியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுப்பியிருக்கிறோம். தோலகட்டியிற் 11 மணிக்குப் பாயும் படி இரு கூட்டம். மானிப்பாயிற் சாமம் 12 மணிக்குத் தாக்கும் படி ஒன்று. யாழ்ப்பாணக் கரையூரை இரவு 1 மணிக்கு நானே வளைக்கத் திட்டமிட்டிருக்கிறேன். முந்திப் பிந்திப் போனால் அந்தப் பாப்பிசுக்குரு தவறிவிடக் கூடுமல்லவா?

வான்றீட் - உமது திட்டம் திறம்தான். எப்படியும் எல்லாக் கூட்டங்களும் பொழுது விடியுமுன் கோட்டைக்கு வந்து விடுமென்று நம்புகிறேன். நாளைக்கு நமது பண்டிகை கொண்டாட்டம் பன்மடங்கு பரிமளிப்பாயிருக்கு மென்பது நிச்சயம். வேறேதாவது தேவையுண்டா?

பட்டன் - இல்லையையா. சும்மா சொல்லிப் போட்டுப் போகவே வந்தேன். சென்று வரட்டுமா?

வான்றீட் - சென்று வாரும்.

## காட்சி 12

(வசாவிளான் சந்தியடியில்)

சாள்ஸ் - நேரம் பத்துக்குக் கிட்டுகிறது. இன்னும் போனவர்களைக் காணேமே.

முத்து - அங்கே இருவர் வருமாப் போலிருக்கிறது. அவர்கள் தான் ஓடிவருகிறார்கள். காரியம் வெற்றிதான்.

ராமு - இடத்தைக் கண்டுவிட்டோம் மச்சான். பெண்பிள்ளைகள் போன வீடுதான். பின்னாலே போய் மர நிழலிலே நின்று அவதானித்தோம். வேறு சிலரும் அதே வளவுக்குள்ளே பிரவேசிக்கக் கண்டோம். பின்பு சுற்றிப்போய் மறுபுறத்து வேலியூடாகப் பார்த்தோம்.

யோச் - அதுதான் தம்பையா உடையார் வீடு. பெரிய கூட்டம். ஆனால் மெத்த அமைதி தாழ்ந்த குரலிலே ஏதோ ஓதிக் கொண்டிருக்கிறார்கள்.

சாள்ஸ் - பாதிரி மாதிரி ஒரு ஆள் அக் கூட்டத்திலில்லையா?

ராமு - இல்லை. உடையார்தான் அங்கு நடுவிலே நடந்து திரியக் கண்டேன்.

சாள்ஸ் - சரி, உடனே நாங்கள் புறப்படுவோம். நான் தெல்லிப்பளை ரோட்டில் வருகிறவர்களுக்கு அறிவிக்கிறேன். முத்து அச்சுவேலி வீதியில் வருகிறவர்களுக்கு அறிவிக்கப்போ: கெதியாகக் கூட்டிக் கொண்டு வந்து வேலையை முடிக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். நீங்களிருவரும் இங்கு நின்று கொள்ளுங்கள். (பிரிந்து போகிறார்கள்).

காட்சி 13

(கரையூரில் ஓர் வீட்டில். உள்ளே நிறையச்சனம். முனிவர் முதலே வந்து விட்டார். பாவசங்கீர்த்தனம் முடிந்து இரவு 10 மணிக்குப் பூசை தொடங்கிறார்).

யோசவ்வாஸ்- (பிரசங்கம்) அருமையான சகோதரரே! ஆதித் திருச்சபை விசுவாசிகள் வேத விரோதிகளாற் துன்புறுத்தப்பட்ட காலத்திலே சுரங்க அறைகளிலே கூடி ஆண்டவன் வழிபாட்டை நடத்தினார்கள். அவர்களைப் போலவே நாமுமின்று இங்கு கூடியிருக்கிறோம். சில வேளைகளில் அவர்களாகப்பட்டு நிட்டூர வாளுக்கிரையாகிச் சத்திய மறைக்குச் சாட்சிகளானதுமுண்டு.

நாமின்று நமது மீட்புக்காகக் கல்வாரிக் குவட்டிலே குறுக்கொன்றிலறையுண்டு தமது இன்னுயிரை ஈந்த யேசுக்கிறிஸ்துவின் பலியிலே பங்கு பற்ற வந்திருக்கிறோம்; எமது பாவங்களுக்கு உத்தரிக்கவும் சகல மனிதருடைய துரோகங்களுக்குப் பரிகாரஞ் செய்யவும் கடவுளுக்குரிய உயரிய ஆராதனையைச் செலுத்தவும் நாம் தயங்கப்படாது நாம் கிறிஸ்துவுடன் உலகுக்கும் நமக்கும் மரித்தாலல்லவா அவருடன் நித்திய பாக்கியத்துக்கு எழுந்திருக்கலாம்

மரியன்னை எமக்கு மீட்பரைப் பெற்றுத் தந்த ஞாபகத்தைக் கொண்டாடுமிவ்வேளையில் அவரே எமதருகிலிருந்து எம்மை வழி நடத்துவாராக. யேசுவை எமக்காக ஒப்புக் கொடுத்தது போல எம்மையும் அவரோடு கடவுளுக்கு ஒப்புக் கொடுப்பாராக. எங்களெல்லாரையும் அவவுடைய அடைக்கலத்தில் வைப்பாராக.

(பலிப்பூசை தொடர்கிறது)

காட்சி 14

(கோட்டையருகில் பட்டனின் பாளயம்).

சேவகன் - (ஓடி வந்து காதிலே) ஐயா, கரையூரிலே கூட்டம் தொடங்கிவிட்டது போலிருக்கிறதென்று உளவு ஒன்று வந்திருக்கிறது. ஆகையால் உடனே புறப்படட்டுமாம்.

பட்டம் - அப்படியா, இங்கு ஒரு மணிமட்டில் என்றல்லோ நம்பி 12 மணிக்குப் புறப்படக் கட்டளை கொடுத்து விட்டேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல வீரர்கள் நித்திரைக்குப் போயிருப்பார்களே. என்று லும் பார்ப்போம். குருவிதான் பறந்து விடுமோ தெரிய வில்லை, உடனே மணியை அடித்து, இன்னும் அரைமணித் தியாலத்திலே புறப்பட வேண்டுமென்று விளம்பரம் அறி வியுங்கள்.

சேவகன் - அப்படியே செய்கிறேனையா.

காட்சி 15

(அந்தோனிச் சட்டம்பியார் வீட்டில் யோசவ்வாஸ் பூசை முடித்து வேறு மூவருடன் மீன் பறிகளைக்காவிக் கொண்டு வெளியேறுகிறார். ஒரு ஆள் ஓடிவந்து சட்டம்பியார்காதில் ஏதோ சொல்லல்)

சட்டம்பியார்- ஆபத்து, ஆபத்து. கோட்டையடிப் பாசறையிலே பர பரப்பாம். ஆதலால் எல்லோரும் விரைவில் வீடுகளுக்கு ஓடவேண்டும். இருபக்கக் கதவாலும் அவசரப் படாமல் வெளியே போங்கள். (அந்தநேரம் பட்டாளம் சுற்றிவளைத் துப் பலரைக் கலைத்துப் பிடித்து அடித்துக் கட்டுதல். கோட்டைக்கு நடத்திக் கொண்டுபோதல்).

காட்சி 16

(கோட்டை இராப்போசன நத்தார் வழிபாடு நடத்தி விட்டுப் பாதிரியாரும் வான்றீட்டும் வெளியே வருகின்ற னர்).

சேவகன் - ஐயா, கைதிகளைக் கொண்டுவருகிறார்கள். (அழுது குழறும் சத்தம் கேட்கிறது)

வான்றீட் - இவ்வளவு நேரத்தோடு அகப்பட்டு விட்டார்களா? நல்லது எல்லாரையும் கிட்டங்கிகளிலே தள்ளி அடைத்துப் போட் டு எங்கள் கொண்டாட்டத்திலே பங்குபற்ற வரும்படி தளபதியிடம் சொல்லு.

சேவகன் - அப்படியே போய்ச் சொல்லுகிறேன் ஐயா!

காட்சி 17

(தோலகட்டி தம்பையா உடையார் வீட்டில் நற்செய்தி வாசிஸையும் செபமாலைத்தியானமும் நடைபெறல்)

ஞானம் - (ஓடிவந்து) சந்தியடியிலே பட்டாளமொன்று வருகிறது. உட னே எல்லாரும் வெளியேற வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடையார் - ஆபத்து, எழும்புங்கள். அவசரப்படாமல் ஓடுங்கள் பின் புறப் படலையாலும் போங்கள்.

ஞானம் - இப்போது சுவாமி எவ்விடத்திலிருப்பார்! அவருக்கு உடனே அறிவிக்க வேண்டுமல்லவா?

உடையார் - முனிவர் மானிப்பாயிலிருந்துதான் வருவார். அந்த வழியிலே போய் நின்றுமறி. வேறு சிலருடன் மீன் பறிகள் சுமந்து கொண்டு வருவார்.

ஞானம் - நான் போகிறேன். நீங்கள் இங்கு இயன்றதைச் செய்யுங்கள்.(பட்டாளம் பலரை வழிமறித்துப் பிடித்தடித்துக்கட்டி கடத்திக் கொண்டு போகிறார்கள். குளறி அழும் சத்தம்).

## காட்சி 18

(மானிப்பாய் வேதமுத்து முதலியார் வீடு. ஒரு பக்கத்திலே செபமாலை ஓதுகிறார்கள். மறுபக்கத்திலே பாவசங்கீர்த்தனம் நடைபெறுகிறது. நடுவிலே யோண் பீடம் ஆயத்தம் செய்கிறான்)

ஒரு ஆள் - (ஓடிவந்து) ஆபத்து ஆபத்து பட்டாளமொன்று கிட்டடியில் வருகிறது.

வேதமுத்து- மாதாவே எங்களுக்கு உதவிசெய்யும். சுவாமி எழும்புங்கள் உடனே வெளியேறவேண்டும் (வாஸ் உடுப்பை மாற்றி, பாத்திரம் சாமான்கள் பறியிலே போட்டுத் தூக்கிக் கொண்டு பின் கதவாலே வேறு ஆட்களுடன் போகிறார்). அவசரப்படாதேயுங்கள் இருபக்கத்தாலும் ஓடுங்கள். (ஆட்கள் வெளியேறும் போது பட்டாளகாரர் ஓடிவந்து அவர்களைக்கலைத்துப் பிடித்து அடித்துக் கட்டி நடத்திக் கொண்டுபோதல். அழுது குழறும் சத்தம்)

## காட்சி 19

(தெருவில் 4 பேர் மீன்பறியும் வீச்சு வலையும் சுமந்து கொண்டு வருகிறார்கள்.)

ஞானம் - (அருகில் வந்து) தோலகட்டியிலே பட்டாளம் வளைந்து விட்டது. நீங்கள் உடனே சில்லாலைக்குத் திரும்ப வேண்டுமாம்.

வாஸ் - ஆண்டவன் திருவுளம் அப்படியா? சரி, திரும்புவோம். மாதாவே, இன்று அகப்படுகிறவர்களின் கெதி‌யது. அவர்களை உமது அடைக்கலத்தில் வைக்கிறேன். சத்தியத்திற்குச் சாட்சிசொல்ல அவர்களுக்கு வேண்டியபெலனைப் பெற்றுக் கொடும்.

(ஐவரும் மறுபக்கம் திரும்பி நடக்கிறார்கள்).

## காட்சி 20

(கோட்டையில் மன்றம் கூடுகிறது. காலை 3 மணி. வான் றீட், பாதிரியார், வேறுசிலர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவகன் 1- பராக்கு (எல்லாரும் எழும்பி, பின் உட்காருதல்)

வான்றீட் - கைதிகளைக் கொண்டுவரலாம்.
(ஆண் பெண் சிறுவரெல்லாரையும் தள்ளிக்கொண்டு வந்து நிறுத்துகிறார்கள்).

பட்டம் - இவர்களெல்லாரையும் ரோமிய வழிபாட்டிலே கூடியிருந்த போது பிடித்து வந்தோமையா.

வான்றீட் - பாப்பிசுக்குரு எங்கே? அவன் அகப்படவில்லையா? அவனைத் தான் முதலிற் கட்டியடித்துக் கழுவேற்ற வேண்டும்.

பாதிரியார்- அவன் இதிலில்லைப் போலிருக்கிறது. ரோமியகுருட்டாட்டத்தில் ஈடுபட்ட இவர்களெல்லாருக்கும் தகுந்த தண்டனை விதிக்க வேண்டுமையா.

வான்றீட் - கௌரவ கொம்பனியின் சத்துராதிகளுக்கு அடைக்கலம் கொடுத்தது இராச துரோகம். திருத்தப்பட்ட திருச்சபையின் வழிபாட்டை அனுசரியாது எதிர்க் கூட்டம் வைத்தது தேவதுரோகம். ஆகவே உங்களெல்லாருக்கும் கொலைத்தண்டனை விதிக்கப்பட வேண்டும்.

தரணி - இது முதற் தடவை ஐயா! அதோடு இன்று நத்தால் திருநாள். ஆதலால் இரக்கம் காட்டவேணும்.

வான்றீட் - (சிறிது நேரம் யோசித்தபின்) சரி, நத்தார் பண்டிகையை முன்னிட்டு இரக்கம் காட்டுவது முறைதான், எனினும் துரோகிகளைத் தண்டியாது விடுதல் பாவமல்லவா?

பாதிரியார்- ஆண்களே சமுதாய பொறுப்பாளிகள். பெண்கள் பிள்ளைகள் அவர்களுக்கு அமைந்து நடக்கிறவர்களே. ஆதலால் அவர்களை எச்சரித்து விடுதலை செய்வது நியாயமாகும்.

வான்றீட் - அப்படியானாற் கவனம், இனிமேல் திருத்திய வேதமுறைப்படி நடக்கவேண்டும். பெண்கள் சிறுவர்களை மன்னிக்கிறோம். அவர்களைப் போகவிடலாம். (அவிழ்த்து வெளியே போகவிடல்)

தரணி - முன் சொல்லப்பட்ட துரோகங்களுக்குகாக, அதாவது ரோமிய குருட்டாட்டக் கூட்டம் வைத்ததுக்கும் பாப்பிசுக் குருவுக்கு அடைக்கல மளித்ததுக்கும் நீங்கள் குற்றவாளிகளல்லவா?

தொன்பேதுரு- இல்லை, நாம் கடவுள் வழிபாட்டில் ஈடுபட்டோம். அவருடைய கட்டளைக்கு அமைந்த படியாற் சுற்றவாளிகள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவகன் 2- என்னடா வாய்க்கொழுப்பு (வாயில் அறைதல்)

எம்மான் - மனிதருக்கு முன்னம் தேவனுக்கு அமைவதல்லவா கடமை அதிலென்ன துரோகம், தவறு?

பாதிரியார்- இப்போது அந்தக் குரு எங்கே என்று சொல்லுங்கள். சொன்னவருக்கு உடனே விடுதலை கிடைக்கும்.

பலர் - அவர் எங்கே என்று எமக்குத் தெரியாது!

பாதிரியார்- அவன் நடத்திய வழிபாட்டில் நீங்கள் பங்குபற்றினீர்கள் அல்லவா?

பலர் - அதுவே எங்கள் பெரிய பாக்கியம்.

வான்றீட் - அந்தப் பாக்கியத்துக்குத்தான் இப்போது பெறுபேறு கிடைக்கப்போகிறது. கொம்பனியின் கீழ் உத்தியோகம் பார்க்கிறவர்களை முற்றவெளியிலே கொண்டு போய் எல்லாரும் காணக் கள்ளியிலே கட்டிச் சவுக்கடி போட்டபின் மறியலில் வையுங்கள். மற்றவர்கள் 300 வராகன் தெண்டமிறுக்கட்டும் அல்லது 3 மாதம் கடுந்த ஊழியம் செய்யட்டும். (வெளியே தள்ளிக் கொண்டுபோதல்).

தரணி - மற்றக் கோஷ்டிகள் இன்னும் வரவில்லையா?

சேவகன் 3- கிட்டடியிலே வருகிறார்களென்று செய்தி கிடைத்திருக்கிறது.

வான்றீட் - சரி காத்திருப்போம். உண்டு குடிக்க ஏதும் கொண்டு வாருங்கள் (சிற்றுண்டி, குடிவகை பரிமாறல்).

சேவகன் 3- கூட்டமொன்று வந்து விட்டது. தோலகட்டியிலிருந்து அகப்பட்டவர்களாம்.

வான்றீட் - உடனே, உள்ளே கொண்டுவரச் சொல்லு. (தள்ளிக் கொண்டு வந்து நிறுத்தல்)

நீங்களெல்லாரும் பூசைக்குப் போனீர்களா?

அந்தோனி- இன்று கர்த்தர் பிறந்த திருநாள். அதற்காக வழிபாடு வைத்தோம்.

பாதிரியார்- பாப்பிசுக்குரு அங்குவரவில்லையா?

அந்தோனி- இந்த அலுகோசுகள் தான் வந்தார்கள். எங்கள் பாவங்களுக்குப் பரிகாரம் செய்விக்கப் போலும்.

பாதிரியார்- நீங்கள் செய்த துரோகங்களுக்குச் சவுக்கடியும் கழுமரமும் தான் விதிக்க வேண்டும்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வான்றீட் - கர்த்தர் பிறப்பை முன்னிட்டுப் பெண்கள் பிள்ளைகளுக்கு மன்னிப்பளித்து விடுதலை செய்கிறேன். இனிமேற் கவனமாய் அமைந்து நடவுங்கள். ஆண்களெல்லாரும் 300 வராகன் தெண்டம் அல்லது 3 மாதம் கடும் ஊழியம் உத்தரிக்கட்டும். வெளியே கொண்டு போகலாம். (வெளியேறுகின்றனர்).

சேவகன் 1- ஐயா மூன்றும் கூட்டமும் வந்து விட்டது. மானிப்பாயில் அகப்பட்டவர்களாம்.

வான்றீட் - இதிலாவது அந்தத் துரோகி கட்டாயம் அகப் பட்டிருப்பான். உடனே வரட்டும். கைதிகளைக் கொண்டுவந்து நிறுத்தல். (முதல் ஆளை நோக்கி) நீதானா அந்தப் பாப்பிசுப் பூசாரி?

கபீல் - அந்த மகிமை எனக்கேது. நானொருசாதாரண விசுவாசி.

பாதிரியார்- அப்படியானால் உங்கள் குரு எங்கே?

சுவாம் - எங்கே என்று எனக்குத் தெரியாது. கடவுளே அவரைக் காப்பாற்றுகிறார்.

பாதிரியார்- சீ, இந்த முறையும் தவறிவிட்டானே! நீங்களெல்லாரும் றோமைக் குருட்டாட்டத்திலே பங்குபற்றினீகளல்லவா?

கபீல் - நாங்கள் மெய்யான கடவுள் வழிபாடு செய்யக் கூடினோம். கர்த்தர் பிறந்த பெருநாள் எங்களுக்குக் கடன் திருநாள்.

வான்றீட் - அதற்காகவா எனது கட்டளைகளை மீறினீர்கள்?

சுவாம் - வாஸ்தவம். மனிதரின் பிளக் காட்டிலும் பார்க்கக் கடவுளின் கட்டளைகள் மேலானவை யில்லையா?

தரணி - நீங்களிந்தக் குற்றத்துக்காக மரண தண்டனை பெறுவீர்களென்று தெரியாதா?

கபீல் - பாவஞ் செய்கிற மனிதரெல்லாரும் ஒரு நாள் கட்டாயம் சாக வேண்டுமென்பது இயற்கை நியதிதானே. அநீதியான கட்டளைகளுக்கு உடன் பட்டு அமைவதும் பாவம் என்று தெரியும்.

வான்றீட் - பாவத்துக்குப் பரிகாரம் செய்ய வேண்டும். ஆண்களெல்லாருக்கும் 300 வராகன் தெண்டம் அல்லது 3 மாதம் கடுந்த ஊழியம். பெண்கள் பிள்ளைகளுக்குக் கர்த்தர் பிறப்பை முன்னிட்டு மன்னிப் பளிக்கிறேன். இனிமேற் கவனமாயிருங்கள். திருத்திய திருச்சபையின் வழிபாட்டுக்கு ஒழுங்காகப் போக வேண்டும். (வெளியேறுகிறார்கள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கம் VI

## பிரிவு

### காட்சி 1

(சில்லாலைக் கோவில் வீட்டில்)

மூப்பர் - யேசு வாழ்க! பிதாவே.

வாஸ் - மரி வாழ்க! மூப்பர். யாழ்ப்பாணத்திலிருந்து கடைசியாக என்ன செய்தி கிடைத்தது?

மூப்பர் - உத்தியோகத்தரான எட்டுப்பேரை முற்ற வெளியிலே கள்ளியிலே கட்டிக் கசைகளாலே கடுமையாக அடித்தார்களாம். திரஞன் பேதுருவைப் பாடா வாரியாக வாட்டினர்களாம். ஒருநாளின் பின் அவர் அந்த வேதனையாலே உயிர் நீத்தாராம். மற்றவர்கள் மறியலிலே வேதனைப் படுகிறார்களாம்.

வாஸ் - யேசுவே, உமது சாட்சிகளை உமது பாக்கியத்தில் ஏற்றுக் கொள்ளும்.

மூப்பர் - கடைசி மூச்சிலும் மற்றவர்களைச் சத்திய வேதத்தில் நிலைத்திருக்கும்படி உற்சாகப் படுத்தினாராம். வேறிருவர் கடுங்காயங்களினாலே உயிராபத்திலிருக்கிறார்களாம். மற்றவர்கள் பாடும் பெரும் உபத்திரவமாம்.

வாஸ் - திருச்சபையின் சரித்திர மதுதான். மனிதர் மனிதரை, வதைக்கிறார்கள். யேசு அதை ஏலவே சொல்லிவைத்தாரே. மற்றவர்களின் பாவத்துக்காகவும் நாமுத்தரிப்பதல்லவா மீட்பரின் மாதிரி?

மூப்பர் - நாமிந்த முறை அதிகம் ஆசைப்பட்டுவிட்டோம். பல இடங்களிலே இரகசியம் காப்பாற்றுவது கடினம். சாத்தான் மனித பெல வீனத்தைப் பாவித்துப் புயலைக் கிழப்பிப் போட்டான். இது எப்போது அமருமோ தெரியவில்லை; வேத விரோதிகள் அதிகாரத்தின் மூலம் விசுவாசிகளை அடக்கி ஒடுக்கி நசுக்கத் துணிந்து விட்டார்கள்.

வாஸ் - இந்த இரண்டரை ஆண்டாக இந்தக் குடாநாட்டிலும் தீவுகளிலும் உள்ள விசுவாசிகளைச் சந்தித்து அவர்களுக்கு ஞான உணவூட்டினேம். இனி, இப்போதைய நிலையில் என்ன செய்வதோ தெரியவில்லை.

மூப்பர் - குரவர் அகப்படவில்லையென்று எதிரிகளுக்கு மிக அவிகாயம். கைதிகளிலே கறுவியம் தீர்ப்பதோடு எமதூருக்கும், சைனிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனுப்பிச் சோதனை செய்ய ஒழுங்கு நடக்கிறதென்று ஒரு செய்தியுமெட்டியிருக்கிறது. அதற்கு நாம் தயாராக வேண்டும்.

வாஸ் - ஆம், எங்களாண்டவர் கட்டளைப்படி ஓரிடத்திலே கலா பணையேற்பட்டால் வேறோரிடத்துக்கு ஓடிப்போக வேண்டியதுதான். இலங்கையின் பெரும் பகுதியில் இன்னும் கால் வைக்கவில்லை. தென் பகுதிகளைச் சந்திக்கப் போகவேண்டுமென்பது ஆண்டவன் சித்தம் போலிருக்கிறது.

மூப்பர் - அப்படியாயின் அவ்விடங்களைப் பார்த்தபின் கட்டாயம் திரும்பிவர வேண்டும். பயணத்துக்கு வேண்டிய ஆயத்தமெல்லாம் செய்து தருவோம்.

வாஸ் - ஆண்டவர் சித்தமானால் வருவோம். தயவு செய்து விமரிசையாக வேண்டிய ஆயத்தங்களைச் செய்யுங்கள். நாளைக்கே போகப் புறப்படுவோம்.

## காட்சி 2

( கோவில் வீட்டில், சுவாம் குடும்பம் சந்திக்க வருகிறது )

யோண் - பிதாவே, எவரோ சந்திக்க வந்திருக்கிறார்கள்.

வாஸ் - அது யாரென்று பார்த்து உள்ளே கூட்டிவா.

அன்று - யேசு வாழ்க, சுவாமி.

வாஸ் - மரிவாழ்க, மக்காள்.

சுவாம் - சுவாமி வேறிடம் போவதாக இன்னாசி சொன்னார். அது தான் சந்தித்து ஆசீர்வாதம் வாங்கிப்போக வந்தோம்.

வாஸ் - அதற்கென்ன கடகத்தோடு?

அந்தான் - அது சுவாமி பயணங் கொண்டுபோக, அரிசியும், தேங்காயும் வாழைக்குலையும்.

வாஸ் - இப்போது இங்கு அதிகாரிகளாலே பெரும் நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. ஆகையால் இப்பகுதிகளில் வழிபாடு நடத்த முடியாது. இலங்கையின் மறுபகுதிகளுக்கு வரும்படி ஆண்டவர் அழைக்கிறார்.

சுவாம் - பரலோக மந்திரத்தில் நாம் சொல்வதை அனுசரிக்க வேண்டும்தானே! அவருடைய விருப்பத்தைச் செய்வதே பெரிய பாக்கியம்.

வாஸ் - இவ்வளவு காலமும் சில்லாலைக் கிறீஸ்தவர்கள் என்னைப் பாதுகாத்தீர்கள். ஒரு குடும்பம் போல என்னுடன் ஒத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துழைத்தீர்கள். செய்த எல்லா உதவிகளுக்கும் நல்ல தேவன் உங்களுக்கு உபகாரம் செய்வார். நான் மன்றுட ஏதாவது விசேஷமாக விரும்புகிறீர்களா?

அன்று - எங்களுக்கு வேறென்ன வேண்டும் பிதாவே. குறையாத சந்தானமும் நிறைவான உணவு பண்டங்களும் அளித்தருள வேண்டுமென்று ஆண்டவரை மன்றுடும்.

வாஸ் - அது நல்ல வேண்டுதல்தான். முளந்தாளிலிருந்து எல்லாரும் செபிப்போம். (பின்னர் எழுந்து) எல்லாம் வல்ல சருவேசுரன் உங்களுக்குப் பிள்ளைகளும் வேளாண்மையும் வாழையும் தென்னையும் செழிக்கச் செய்வாராக. அதோடு, தளாரத சத்திய வேத விசுவாசத்தையும் அருள்வாராக!

இருவரும் - (எழுந்து) மெத்தப் பெரிய உபகாரம், சுவாமி.

அந்தான் - ஏன் அம்மா அழுகிறீர்கள்? சுவாமி இனித் திரும்பிவர மாட்டாரா?

வாஸ் - உடனே இல்லை. சில காலம் கழித்து வருவேன். நல்ல பிள்ளையாய் சொல்வழி கேட்டு வளரவேண்டும்.

சுவாம் - வேறு ஆட்களும் சந்திக்க வருகிருர்கள். நாங்கள் போய் வருகிறேம் சுவாமி.

வாஸ் - போய் வாருங்கள்.

## காட்சி 3

(புன்னலை ஆற்றங்கரையில், முனிவரும் யோனும் வேறு இருவரும் நிற்கிருர்கள்.

சூசை - (ஓடி வந்து) குருவே, பதிதர் பட்டாளம் சில்லாலையிலே புகுந்து சோதனை செய்கிருர்கள். ஆதலால் காலந் தாழ்த்தாமல் உடனே காரைதீவு போகவேண்டும்.

யோஸ் - ஐயோ, இப்போது பெருக்குநேரமாச்சே; ஆறு எட்டாத் தண்ணீராமே. வற்றுத் தொடங்க ஒரு மணித்தியாலமாகுதல் எடுக்குமே.

சூசை - ஊரிலே தேடிவிட்டுக் கட்டாயம் இந்த வழியே வருவார்களென்று இன்ஞசி சொன்ஞர்.

வாஸ் - வாருங்களெல்லாரும் முளந்தாளிட்டுச் செபிப்போம். (சிறிது நேரம் செபித்தபின்) மீட்பர் கீழே தாளாது தாங்கிய தண்ணீரே அவர் கட்டளைக்கமைந்து இரசமாக மாறினுயே. இப்போது அவர் பெயராலே அவருடைய வழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யர்கள் போக முன்வற்றிப் பின் பெருகு. (நால்வரும் இறங்கி நடக்கின்றனர்).

சூசை - இறைவா, நன்றி. உமது ஊழியனுக்கு இவ்வாறு இயற்கை மேல் அதிகாரம் அளித்ததற்கு நன்றி. அவரையும் எங்களையும் காப்பாற்றும்.

## காட்சி 4

(பூநரினில் ஒருவீடு, முனிவர் வாசித்துக் கொண்டிருக்கிறார்).

யோண் - சில்லாலையிலிருந்து இருவர் காண வந்திருக்கிறார்கள், பிதாவே.

வாஸ் - அவர்களை அழைத்துக் கொண்டுவா, மகனே.

சீமானும் மிக்கேலும் - (முனிவர் முன்னே முளந்தாளிட்டு) பிதாவே எங்களை மன்னித்தருளும். எங்கள் பிழையாலே உம்மை இழந்ததென்று உமது பொறுத்தலைப் பெறவும் சேமம் விசாரித்துவரவும் மூப்பர் அனுப்பினார்.

வாஸ் - எனக்கெதிராக என்ன தவறு செய்தீர்கள்? ஞாபகமில்லையே.

சீமான் - ஆவணியிலே நான் சதி செய்து கசையடிபட்டது, தேவரீருக்கு ஞாபகமில்லையா?

மிக்கேல் - மார்கழியில் எனது விமரிசையினத்தாலே பூசை வைக்கும் இடங்களைப் புதிதர் அறிந்து விட்டார்கள்.

வாஸ் - மனிதர் தவறு செய்வதில் அதிசயமில்லை. மன்னிப்புப்பெற அதையறிந்து அதன் காரணத்தை ஆராய்ந்து அதைத் திருத்த விரும்பவேண்டும். உறுதியான பிரதிக்கினையின்றி மன்னிப்புக்கிடையாது. அதின் காரணத்தை உணர்ந்தீர்களா?

மிக்கேல் - ஆம் பிதாவே. மதுபானம் மதியை மயக்கியது. அதனால் இனிமேல் அதைத் தொடவும் மாட்டேன் சுவாமி.

சீமான் - மதுவோடு பொருளாசையும் என்னை அலும்பிப்போட்டது. இப்போது திருந்தி விட்டேன் சுவாமி.

வாஸ் - சருவேசுரன் உங்களுடைய மனத்தாபத்தை ஏற்று உங்களை ஆசீர்வதிப்பாராக. நல்ல பொருளையும் அளவோடு பாவிக்க அறியாவிடில் அதைத் தொடப்படாது;
இனி யாழ்ப்பாணத்தில் நிலைபரம் எப்படியிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிக்கேல் - யாழ்ப்பாணத்திலே குற்றம் கட்டமுடியாதவர்கள் மறியலிலே துன்புறுத்தப்படுகிறார்களாம். கோட்டைக்குக் கல்லுச் சுமந்து உடல் நலிந்து போகிறார்கள். கசையடிபட்டவர்களில் இன்னும் இருவர் மாத்திரம் உயிரோடிருக்கிறார்கள். அவர்களும் விரைவிலிறந்து போவார்களென எண்ணுகிறேன்.

வாஸ் - பயத்தினாலே எவராவது விசுவாசத்தை மறுதலித்ததுண்டா?

மிக்கேல் - அப்படிக் கேள்விப்படவில்லை. பிச்சையெடுத்தும் குற்றம் கட்டுவதொழியப் பாதிரிகோவிலுக்குப் போவதில்லையென்று எல்லாரும் துணிந்து விட்டார்கள்.

வாஸ் - கடவுளுக்கு நன்றி. சில்லாலையில் எப்படி?

சீமான் - தேவரீர் புறப்பட்ட அன்றே பட்டாளம் வருகிறதென்று தகவல் கிடைத்தது. கோவிலை மட்டுமல்ல ஊரையுமே சோதிப்பார்களென்று சொல்லிச் சுருவங்களெல்லாவற்றையும் மூப்பர் கல்லுக்கட்டிக் கிணற்றுள்ளே இறக்கிப் போட்டார். எல்லாம் துப்பரவாக்கியும் கோவிலுள்ளே ஒரு பழஞ் செபமாலை தவறித் தொங்கியது. அது அதிகாரியின் தகரத் தொப்பியிலே தட்டினபோதும் சத்துராதிகளெவரும் அதைக் கவனிக்கவில்லை. அது மாதாவின் புதுமையென்றே சொல்ல வேண்டும். ஊரிலே சோதனை தொடங்கினவுடனே மூப்பர் உம்மை எச்சரிக்கச் சூசையை அனுப்பினார்.

வாஸ் - ஆம் அவர் வந்து அறிவித்தார். தேவகிருபையால் உடனே ஆற்றைக் கடந்து காரைதீவு சேர்ந்தோம். பின்னர் வள்ளமொன்றிலே ஊருத்துறைபோய் அங்கு சிலநாட்கழித்த பின் இங்கு வந்தோம். இவையெல்லாம் என்னுடன் வந்த இருவரும் அறிவித்தார்களே!

சீமான் - ஆம் அறிவித்தார்கள். அதன் பின்னர் தான் எங்களை அனுப்ப மூப்பர் முடிவு செய்தார். நாங்கள் போய்ச் சொல்ல வேண்டியதை அறிவிக்க வேண்டும் சுவாமி.

வாஸ் - மூப்பருக்கு ஒரு கடிதம் வரைந்து தருகிறேன். அதற்கிடையில் நீங்கள் யோனுடன் போய் ஏதாவது பசியாறுங்கள். (அவர்கள் போக முனிவர் கடிதமெழுதுகிறார். அவர்கள் திரும்பி வந்ததும் கடிதத்தைக் கொடுத்து) எனது அன்பையும் நன்றியையும் திருச்சபைக்கு அறிவியுங்கள். நல்ல தேவன் உங்களெல்லாரையும் ஆசீர்வதித்துக் காப்பாராக!

இருவரும் - மெத்தப் பெரிய உபகாரம். போய் வருகிறோம்.

வாஸ் - போய் வாருங்கள்.

6301

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிழை திருத்தம்

| பக் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| V | 3 | பெருமை | பெருமை. |
| | 31 | காட்கிகளுக்கு | காட்சிகளுக்கு |
| 2 | 19 | ஏலோலோம் | ஏலேலோம் |
| 6 | 14 | கண்டிருக்கிவேன் | கண்டிருக்கிறேன் |
| 7 | 12 | சொண்டு | கொண்டு |
| 14 | 18 | பொடியனும | பொடியனும் |
| 17 | 23 | பெறும் | பெறும். |
| 21 | 14 | சருவேசுரளின் | சருவேசுரனின் |
| 24 | 31 | பொண் | யோண |
| 26 | 14 | போவோம் | போவோம். |
| 29 | 16 | உபதேசிபாரே | உபதேசியாரே |
| 30 | 24 | ேற்ன் | றேன் |
| | 32 | எடுத்த்து | எடுத்து |
| 31 | 7 | தாள் | தான் |
| 34 | 20 | வெச்சம் | வெளிச்சம் |
| | 23 | கடையாகுதல் | கட்டையாகுதல் |
| | 24 | தைப்பிச்சுய் | தைப்பிச்சுப் |
| | 28 | வேறுமென்ருல் | வேணுமென்ருல் |
| 39 | 10 | அறிவுக்க | அறிவிக்க |
| 45 | 28 | அமைதி | அமைதி. |

6301

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலி தெற்கு பிரதேச சபை
பொதுசன நூலகம்

இப்புத்தகம் கீழ்க் குறிக்கப்பட்டுள்ள திகதி அல்லது அதற்கு முன்னர் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும். குறித்த தவணைக்குள் கொடுக்கப்படாத புத்தகம் ஒவ்வொன்றுக்கும் நாள் ஒன்றுக்கு குற்றப்பணமாக ரூபா 1.00 அறவிடப்படும்.

| | | |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

| வகுப்பெண்: | வரவுப் பதிவெண் : |
|---|---|
| 894.8112 | 6301 |

| பகுப்பு எண் | சேர்வு இல |
|---|---|
| 894.8112 | 6301 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org